# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் - 55
விலை ரூபாய் 30.00

தீபம்-55 | மாசி இதழ் - 2019,
ஆரம்பம் 15 மாசி - 2013

திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர். (லூக் 11:28)

## சாம்பல்தீவு புனித திருமுழுக்கு யோவான் ஆலய திருப்பாலத்துவ சபையினரின்

## திருப்பலி மற்றும் சந்தை நிகழ்வுகள்




கடந்த 27.01.2019 ஞாயிற்றுக்கிழமையன்று சாம்பல்தீவு புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பாலத்துவ சபை சிறார்கள், ஊக்குவிப்பாளர்கள், மற்றும் பங்கு மக்கள் அனைவரும் இணைந்து காலை திருப்பலியை சிறப்பித்தனர். அதனைத் தொடர்ந்து திருப்பாலத்துவ சபை செயற்பாடுகளுக்கு நிதி திரட்டும் முகமாக சந்தை நிகழ்வினையும் மேற்கொண்டனர். பங்கு மக்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கி நிகழ்வினை சிறப்பித்திருந்தார்கள். இந்நிகழ்வினை ஊக்குவித்த பங்குத்தந்தை, ஊக்குவிப்பாளர்கள், பெற்றோர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**நன்றி - ஊக்குவிப்பாளர்கள்,**
**சாம்பல்தீவு.**

## ஐக்கிய அரபு அமீரகப் பயணம்

### குறித்து ஆயர் பால் ஹிண்டர்




திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஐக்கிய அரபு அமீரகத்தில் மேற்கொள்ளும் பயணத்தின் முக்கிய விளைவுகளில் ஒன்று, குடிபெயர்ந்து வாழும் கிறிஸ்தவர்களின் முக்கிய பங்கை உலகறியச் செய்வது என்று, தென் அரேபியப் பகுதியின் அப்போஸ்தலிக்க நிர்வாகி, ஆயர் பால ஹிண்டர் அவர்கள், ஆசிய செய்திக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

## இயேசுவோடு 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை

**இடம்** : புனித அன்னை வேளாங்கன்னி ஆலயம், ஆண்டாங்குளம்.

**காலம்** : 02. 02. 2019 (சனிக்கிழமை)

**நேரம்** : மதியம் 12 மணி முதல் இரவு 12 மணி வரை



**திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக செபத்தில் இணைந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகள்**

## ஏமன் நாட்டில் மனிதாபிமான உதவிகள் உடனே கிடைக்க...



நீண்டதொரு போரின் விளைவுகளால், அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் இழந்து தவிக்கும் குழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோர் எழுப்பும் அழுகுரல் இறைவனை நோக்கி எழுகிறது என்று, திருந்தந்தை தன் உரையில் வேதனையுடன் கூறினார்.

போரின் கொடுமைகளால், ஏமன் நாட்டில், உணவின்றி குழந்தைகளுக்குத் தேவையான உதவிகள், மனிதாபிமான அடிப்படையில் உடனே கிடைக்க வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்தார்.

தேவையில் இருப்போருக்கு உதவிகள் சென்றடைய வேண்டும் என்று அழைப்பு விடுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வளாகத்தில் கூடியிருந்த அனைவரோடும் இணைந்து, "அருள் நிறை மரியே" செபத்தை செபித்தார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

### அறிவித்தல்

அன்பான வாடிக்கையாளர்களுக்கு...

இம்மாதம் முதல் எமது திருமலைத்தீபம் பத்திரிகையின் விலையானது 30/- ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அழிவுக்கு முந்தியது அகந்தை, வீழ்ச்சிக்கு முந்தியது வீண் பெருமை (நீ. மொ- 16:18)

# படித்ததில் பிடித்தது




பாதிரியாரைச் சந்தித்தார் கம்ப்யூட்டர் இன்ஜினியர்.
"பாதர்...! ஞானம் பெற என்ன செய்ய வேண்டும்?"
பக்குவமாய் சொன்னார் பாதிரியார்:
முழு பைபிளையும் வாசி. ஞானம் வரும்.
முழு பைபிளையா?
சாரி, ஐ யாம் சூ பிஸி.
அதில் முக்கியமானதை மட்டும் சொல்லுங்கள். வாசிக்கிறேன்.
சரி, பைபிளில் புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாடு என்ற இரு புத்தகங்கள் இருக்கின்றன.
அதில் புதிய ஏற்பாடு என்ற புத்தகத்தை மட்டும் வாசி.
ஓ... ஒரு புத்தகத்தையா...?
முடியாது. ஐ யாம் எ பிஸி பீ (Bee)
அதில் முக்கியமானதை மட்டும் சொல்லுங்கள்.
வாசிக்கிறேன். ப்ளீஸ்!
சரி, அதில் மாற்கு எழுதிய நற்செய்திதான் சிறியது.
அதை முழுதும் வாசி போதும்...!

என்ன ஒரு முழு நற்செய்தியையுமா?
என்னை மன்னிக்க வேண்டும் பாதர்.
அதிலுள்ள முக்கியமான வரிகளை மட்டும்
-சொல்லுங்கள்.
வாசித்து ஞானம் பெறுகிறேன்.

எதார்த்தமாய் யோசித்தார் பாதர்.
சரி, நீ பெரிய பிஸி மேன் போலிருக்கு.
மாற்கு நற்செய்தியில் வரும் இரண்டே இரண்டு
வரிகளைச் சொல்லுகிறேன். தியானித்துப் பார்...!


சொல்லுங்க பாதர்...

குறித்துக்கொள்ளத் தயாரானார்.
உன்னை நீ அன்பு செய்.
உன்னை நீ அன்பு செய்வது போலப்
பிறரையும் அன்பு செய்.

குறித்துக் கொண்டவன் தான் ஒரு அறிவுக் கொழுந்து எனக் காட்டிக் கொள்ள விரும்பினான். கேள்வி ஒன்றைக் கேட்டான்:
பாதர், ஆழமான, அர்த்தமுள்ள வரிகள் இவை. அவற்றின் ஆழத்தை, அர்த்தத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?
நிதானமாய்ச் சொன்னார் பாதிரியார்:
முழு பைபிளையும் ஆரம்பத்திலிருந்து படி.

Fr. T. கிங்ஸ்லி

# ஆசிரியரது தாராள மனது



ஒரு பிரத்தியேக வைத்தியசாலைக்கு முருகேசு தனது 10 வயது பிள்ளைக்கு காய்ச்சல் என மருந்து எடுக்க வந்தார். பிள்ளைக்கு சரியான காய்ச்சல் அவரிடம் இருந்ததோ ரூபா 750 மட்டும். இதற்கு முன்னர் பிரத்தியேமாக மருந்துக்கு சென்றதில்லை. வைத்தியரும் இளமைத்தோற்றமுள்ளவர், அவர் பரிசோதித்து விட்டு சகல இரத்தப் பரிசோதனைகளையும் செய்யும்படி துண்டைக் கொடுத்தார். அவரும் அருகில் உள்ள வைத்தியரது பிரத்தியே பரிசோதனை மனையில் பரிசோதனையை மேற்கொண்டார், முடிவும் கிடைத்தது. இரத்தம் பரிசாதித்த பணம், வைத்தியம் பார்த்த கூலி, மருந்து செலவு என ரூபா 1500 ஐ கேட்டார்.

அத்தந்தை தலையைத் தொங்கவிட்டு வைத்தியரிடம் 750 ஐ கொண்டு வந்து கொடுக்க மிகுதி எங்கே எனக் கேட்டு, மிகுதிப் பணத்தைக் கொடுத்து விட்டு மருந்து வில்லைகளைப் பெற்றுச் செல்லும் என்றார். பிள்ளையின் தந்தைக்கு தூக்கி வாரி விட்டது. சிறிது யோசித்துக் கொண்டிருந்தார். இதை அவதானித்து அருகில் மருந்து எடுக்க வந்திருந்த ஆசிரியர் ஜோசப் என்ன யோசிக்கிறீர்கள் என்று கேட்டார். அவரும் என்னிடம் இருந்த பணம் 750 ரூபாவைக் கொண்டு வந்தேன் வேறு பணம் இல்லை என்ன செய்வதெனத் தெரியவில்லை என்றார்.

ஆசிரியரும் ஒரு புன்சிரிப்புடன் இந்தாருங்கள் பணம் எனக் கூறி ரூபா 1500ஐ கொடுத்தார். முருகேசு எதிர்பார்க்கவில்லை. பணத்தை வாங்கி கண்ணில் வந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு நன்றி ஐயா, இப்பணத்தை இம்மாதக் கடைசியில் தருகிறேன் ஐயா! என்றார். ஆசிரியரும் அப்பணத்தை எனக்குத் தர வேண்டாம் பிள்ளைக்குச் சத்தான உணவுப் பொருட்களை வாங்கிக் கொடுங்கள் என்றார். அவனும் என் மாணவன் தான் என்றார்.

இதனை அவதானித்துக் கொண்டிருந்த வைத்தியர் தனது மனதுக்குள் அந்த ஆசிரியருக்கு இருந்த குணம் எனக்கு இல்லாமல் போய்விட்டதே என நினைத்தார். அந்த குணத்தை சற்று முதலில் நான் காட்டியிருக்கலாமே. பணம் எனது கண்ணை மறைத்து விட்டதே என மனம் நொந்தார். இக்காலத்தில் இப்படியும் இருக்கிறார்களே என கடவுளுக்கு நன்றி கூறினார். அடுத்த கிழமை சுகவீனமுற்ற பையன் நல்ல சுகமாகி பாடசாலைக்குச் சென்றான். அவ் ஆசிரியரும் பையனது சுகத்தை விசாரித்து நல்ல வைத்திய கல்வி ஆலோசனைகளை வழங்கினார். அப்பையனும் ஆசிரியர் மட்டில் நன்றியுள்ளவனாக இருக்கின்றான். இது போன்ற தாராள மனது எம்மிடம் உள்ளதா?

- ச. அந்தோனிப்பிள்ளை

நண்பர்கள் தவறு செய்தால்
மன்னித்து விடாதே,
மறந்து விடு,
ஏனெனில் அவர்கள்
உன் உறவுகள் அல்ல
உணர்வுகள்!

உனக்கு மன அமைதி
வேண்டுமானால் யாரிடமும்
குறை காணாதே

எதுவும் இல்லாத போது சமாளிக்கும் திறமையும், எல்லாம் உள்ள போது நீ நடந்து கொள்ளும் முறையுமே உன் வெற்றியைத் தீர்மானிக்கின்றது.

வாழ்க்கையில்
நிம்மதி
தேவையென்றால்
ஞாபக மறதி
நிச்சயம் தேவை

**பேச்சின் சிறப்பு**

கோபமாய்ப் பேசினால்
குணத்தை இழப்பாய் !
வேகமாய் பேசினால்
அர்த்தத்தை இழப்பாய் !
வெட்டியாய் பேசினால்
வேலையை இழப்பாய் !
அதிகமாய்ப் பேசினால்
அமைதியை இழப்பாய் !
ஆனவமாய் பேசினால்
அன்பை இழப்பாய் !
சிந்தித்து பேசினால்
சிறப்போடு வாழ்வாய் ! ! !



தினமும் ஏன் இந்த ஓட்டம்?
என்ற சலிப்புடன்
கடிகாரம் பார்த்தேன்.
அது என்னிடம் கேட்டது.
நான் ஓடாவிட்டால்
என்ன செய்வாய்?
நான், தூக்கி எறிந்து
விடுவேன் என்றேன்.
அதற்கு அது கூறியது,
"நீயும் ஓடாவிட்டால்
இந்த உலகம் உன்னை
தூக்கி எறிந்து விடும்........"



வாழ பிடிக்கவில்லை
என்றால்
தற்கொலை செய்து கொள்
தற்கொலை செய்யும்
அளவுக்கு தைரியம்
இருந்தால்
வாழ்ந்து பார்.



உங்கள் குழந்தைகளுக்கு!
தப்பு செய்யாதே கடவுள்
உன்னை தண்டிப்பார் என
சொல்லிக் கொடுப்பதை விட,
நல்லது செய் கடவுள்
உன்னை பாதுகாப்பார்
என சொல்லிக்கொடுங்கள்

சைக்கிள் ஓட்ட கஷ்டமா
இருக்கேன்னு பைக்க வாங்கி,
பைக்க விட கார் சௌகர்யமா
இருக்குமேன்னு கார வாங்கி
அதனால தொப்பைய வாங்கி இப்ப
அதை குறைக்க ஜிம்முக்கு
போனா ....

அங்க ஓடாத சைக்கிள
ஓட்டசொல்றாங்க...வாழ்க்க ஒரு
வட்டம் !! O

கூட்டத்தில் சிரி
தனித்து அழு
கூட்டத்தில் அழுதால்
நடிப்பு என்பார்கள்
தனித்து சிரித்தால்
பைத்தியம் என்பார்கள்

யாருக்காகவும் உன்னை
மாற்றிக் கொள்ளாதே!
ஒருவேளை மாற நினைத்தால்,
ஒவ்வொரு மனிதர்களுக்கும்
நீ மாற வேண்டியிருக்கும்

- கண்ணதாசன்



பச்சோந்தி ஒன்று தற்கொலை
செய்து கொள்ள முன் ஒரு
கடிதத்தில் இப்படி
எழுதியிருந்தது,
நிறம் மாறும் போட்டியில்
மனிதர்களிடத்தில் நான்
தோற்று விட்டேன்..

நிஜமாத்தான் சொல்றீங்களா......டாக்டர்?
என் மனைவியைக் காப்பாத்த வழியேஇல்லையா......!



யோவ், உனக்கு இதக் கேக்க கேக்க சந்தோசமா இருக்கலாம்..... அதுக்காக எத்தன தடவ திரும்ப திரும்ப சொல்லிக்கிட்டு இருக்கிறது?

கடலில் இருக்கும் அத்தனை நீரும் ஒன்று சேர்ந்தால் கூட ஒரு கப்பலை மூழ்கடிக்க முடியாது - கப்பலுக்குள் புகுந்தால் மட்டுமே அது சாத்தியம். "வாழ்வின் எந்த பிரச்சனையும் உங்களை பாதிக்கவே முடியாது - நீங்கள் அனுமதித்தால் தவிர"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆயரின் செய்தி

கிறிஸ்து இயேசுவின் அன்பார்ந்தவர்களே,
**ஆண்டவர் இயேசுவில் என் இனிய வாழ்த்துக்கள்!**

புதுவருடம் பிறந்து ஒரு மாதம் கழிந்துவிட்டது. எமது பணிகள் உத்வேகத்தோடு தொடர வேண்டும். கடந்த இதழில் இவ்வாண்டிற்கான எமது மேய்ப்புப்பணி மடலை வெளியிட்டிருந்தோம். இவ்வாண்டிற்கான மூன்று தலைப்புக்களும் பல ஆலோசனைகளின் பின் தீர்மானிக்கப்பட்டவை. விவிலிய வாசிப்பு ஆண்டு, ஹாக்கா நற்செய்தி ஆண்டு, சமூக விழிப்புணர்வு ஆண்டு - இவற்றை நாம் தனித்தோ, குடும்பமாகவோ பங்குச் சமூகமாகவோ செயல்படுத்தலாம். பங்குத் தந்தையர்களும் இவர்களோடு இணைந்து செயல்படும் பங்கு மேய்ப்புப்பணி அங்கத்தவர்களும் கூடிய கவனமெடுத்து செயல்பட வேண்டுமென்பது எமது வேண்டுகோள். நாளாந்த விவிலிய வாசிப்பிற்கான அட்டவணை ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. திருமலை தீபத்திலும் வெளியிடப்படும். முதல் ஆறுமாத அட்டவணையே இது. திருவிவிலியத்தை முறையாகவும் முழுமையாகவும் வாசித்து முடிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியே இது. எமது இரண்டாவது தலைப்பாகிய ஹாக்கா நற்செய்தி பற்றிய ஆழமான அறிவை நாம் பெறும் நோக்கோடு விசேட கருத்தரங்குகளை நடாத்த அதற்குப் பொறுப்பாக இருக்கும் அருட்தந்தை போல் றொபின்சன் அடிகளார் ஆயத்தமாக உள்ளார். பங்குமட்டங்களில் அவரை அணுகி வேண்டிய ஒழுங்குகளை செய்துகொள்ளலாம். மூன்றாவது தலைப்பாகிய சமூக விழிப்புணர்வு பற்றி தெரிவுசெய்யப்பட்ட குருக்கள் செயல்படுவார்கள். இதில் முகநூல், போதைப்பொருள் பாவனை கொண்டு வரக்கூடிய தீமைகள் பற்றிய விழிப்பை நாமும் பெற்று அடுத்தவர்க்கும் தெளிவூட்ட வேண்டும். எமது குடும்பங்கள், சமூகம் தீமைகளுக்கு அடிமையாவதிலிருந்து காத்து வாழ வைப்போம், இணைந்து செயல்படுவோம்.

இம்மாதம் 23ம் திகதி காலி மறைமாவட்டம் தனது 125ம் ஆண்டு நிறைவை சிறப்பிக்கின்றது. திருகோணமலை மறைமாவட்டமும் காலி மறைமாவட்டமும் ஒரே காலத்தில் 25 ஆகஸ்ட் 1893ல் புதிய மறைமாவட்டங்களாக உருவாகின. இந்த சிறப்பான நிகழ்வில் கலந்துகொள்ள நானும் அழைக்கப்பட்டுள்ளேன். காலி மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய ரேமன் விக்ரமசிங்க, குருமுதல்வர், குருக்கள், துறவறத்தவர், பொதுநிலை விசுவாசிகள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். வளர்ந்து வரும் இம்மறைமாவட்டம் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்து ஆண்டவர் இயேசுவிற்குச் சான்று பகர செபிப்போம்.

மார்ச் மாதம் 6ம் திகதி திருநீற்றுப் புதன். தவக்காலத்தினுள் நாம் நுழைகின்றோம். எமது மனமாற்றத்திற்கும், ஒப்புரவிற்கும், புதுவாழ்விற்குமான சிறப்பான காலம் இது. இக்காலத்தை முழுமையாகப் பயன்படுத்த எம்மை ஆயத்தம் செய்வோம்.

**இறையாசீர் எப்போதும் உங்களோடு இருப்பதாக.**

கிறிஸ்துவில்,

**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**

## சிந்தனைக்கு......................

❖கற்றுக்கொள்ள வேண்டுமே என்று கவலைப்படுவதை விடக் கற்றுக் கொண்டதைக் கடைபிடிக்க வேண்டுமே என்பதைப் பற்றி அதிகம் கவலைப்படு.


❖மற்றவர்களைக் காப்பாற்றுவது போல் நடித்து பலர் தங்களையே காப்பாற்றிக் கொள்கிறார்கள்.

❖சினங்கொள்ளும் போது உன் முகத்தைக் கண்ணாடியில் பார். மறுமுறை அவ்வளவு எளிதில் சினங்கொள்ள மாட்டாய்.

❖உயரமாய் வளர்ந்திருக்கும் மரங்கள் எல்லாம் உயர்ந்த மரங்கள் அல்ல.

❖தெருவில் கிடக்கும் பொருட்கள் எல்லாம் வேண்டாத பொருட்கள் என்ற முடிவுக்கு வருவது தவறு. சிலரால் இழக்கப்பட்ட பொருட்களும் தெருவில் கிடக்கலம்.

# பதிப்பாசிரியர் பகிர்வு



அருட்பணியாளர். T. கிங்ஸ்லி றொபட்

**துரித உணவுக் (Fast Food) கடையில் கிடைப்பதல்ல ஞானம்...!**

மாசி (பெப்ரவரி) மாதம் 4ம் நாள் நம் தாய்த்திருநாடு சுதந்திரம் பெற்ற 71வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றோம். இந்த நாளை சுதந்திர தினம் என்று அழைப்பதற்குப் பதிலாக தேசிய தினம் என்று அழைப்பது சிறப்பானது என்னும் கருத்து அண்மைக் காலத்தில் மேலோங்கி இருப்பதைக் காணலாம். வார்த்தைப் பிரயோகம் எப்படியாக இருந்தாலும் இந்த நாள் குறித்து நிற்கும் சுதந்திரக் காற்றை விடுதலை வேட்கையை நாட்டு மக்கள் அனைவரும் சுவாசிக்கின்றனரா என்பது கேள்விக்குறியே! அரசியல், பொருளாதார, சமூக, சமய சுதந்திரம் முழுமையாக நாம் சுவைக்க முடியாத எட்டாக் கனியாகக்கூட இருக்கலாம்.

ஆயினும் தனி மனித வாழ்வில், எமது அன்றாட வாழ்வில் - நமக்கு நாமே உருவாக்கக் கூடிய - நமக்கு வேண்டிய, அதேவேளை மிகவும் வேண்டப்படாத சுதந்திரம் என்ன என்பதைப் பற்றிச் சிந்திப்பது நலமானது. தொடரும் சிந்தனைத் துளிகள் அருள்பணியாளர் ஜெரி அவர்களின் இன்று முதல்... என்ற நூலில் பின்வருமாறு மிளிர்கின்றன:

1. சுதந்திரம்
வேண்டும்
✍ ஆனால் அதற்காக
நினைத்த அனைத்தையும்
நியாயப்படுத்தும்
சுதந்திரம் வேண்டாம்...!

2. சுதந்திரம்
வேண்டும்
✍ ஆனால் அதற்காக
விரும்பிய அனைத்து
ஆசைகளையும் முன்நிறுத்தும்
சுதந்திரம் வேண்டாம்...!

3.சுதந்திரம்
வேண்டும்
✍ ஆனால் அதற்காக
அக்கம் பக்கத்திலுள்ளோரை
அவதிப்படுத்தும்
சுதந்திரம் வேண்டாம்...!

4. சுதந்திரம்
வேண்டும்
✍ ஆனால் அதற்காகப்
படைத்தவரையே
தூக்கியெறிந்து பேசும்
சுதந்திரம் வேண்டாம்...!

வாழ்க வையகம், வாழ்க வளமுடன்.

# மாசி 2019 மறைமாவட்ட நிகழ்வுகள்

02.02.2019 சனிக்கிழமை
: 12 மணிநேர நற்கருணை ஆராதனை - ஆண்டாங்குளம்.
03.02.2019 ஞாயிற்றுக்கிழமை
: பொதுக்காலம் - 4ம் ஞாயிறு.
: திருவிழா - குழந்தை இயேசு ஆலயம், முன்னம்பொடிவட்டை, (இருதயபுரப் பங்கு)
: திருவிழா - குழந்தை இயேசு ஆலயம், உவர்மலை.
04.02.2019 திங்கள்கிழமை
: கத். இளைஞர் ஒன்றியம் - சிரமதானம், உப்புவெளி வைத்திய நிலையம்.
08.02.2019 வெள்ளிக்கிழமை
: குடும்ப அப்போஸ்தலம் - திருமண முன் ஆயத்தக் கருந்தரங்கு
09.02.2019 சனிக்கிழமை
: குடும்ப அப்போஸ்தலம் - திருமண முன் ஆயத்தக் கருந்தரங்கு.
: மரியாயின் சேனை - கியூரியா கூட்டம்.
: கிறிஸ்தவ வாழ்வுச் சமூகம் - ஒரு நாள் தியானம்
: மறைக்கல்வி ஆணையம் - மறையாசிரியர்களை பேரருட்திரு ஆயர் அவர்கள் சந்திக்கும் விசேட ஒன்றுகூடல்.
10.02.2019 ஞாயிற்றுக்கிழமை
: பொதுக்காலம் 5ம் ஞாயிறு.
: மறைக்கல்வி ஆணையம் - பங்குத்தரிசிப்பு
13.02.2019 புதன்கிழமை
: சிறிய கிறிஸ்தவ குழுமம் (அன்பியம்) - குருக்கள், துறவறத்தார்களுக்கான விசேட கருத்தமர்வு: அருள்தந்தை விஜய் (இந்தியா).
16.02.2019 சனிக்கிழமை
: மறைமாவட்ட மேய்ப்புப்பணி நிர்வாக சபைக் கூட்டம்.
மறைக்கல்வி ஆணையம் - தேர்வு 1, 2, 3இற்கான கருத்தரங்கு
17.02.2019 ஞாயிற்றுக்கிழமை
: பொதுக்காலம் 6ம் ஞாயிறு.
19.02.2019 செவ்வாய்கிழமை
: கத். இளைஞர் ஒன்றியம் - மறைமாவட்ட இளையோர் கூட்டம்.
: புனித வின்சன்ட் டி பவுல் சபை - மாதாந்தக் கூட்டம்.
23.02.2019 சனிக்கிழமை
: திருவழிபாடு - வழிபாட்டுக் குழுவினருக்கான கருத்தமர்வு.
: சிறிய கிறிஸ்தவ குழுமம் (அன்பியம்) - மறைமாவட்ட ஊக்குவிப்பாளருக்கான கூட்டம்.
: கி.வா.சமூகம் - சிரமதானம்
24.02.2019 ஞாயிற்றுக்கிழமை
: பொதுக்காலம் 7ம் ஞாயிறு.
: சிறிய கிறிஸ்தவ குழுமம் (அன்பியம்) - பங்குத் தரிசிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 19

# நல்லாசிரியர்: ஆளுமையும்



அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி
(BTh,B.A. (Hons), PGDE, MEd)

## ஆசிரியர் :
## நல்ல மனிதராய் இருப்பது அவசியம்

ஆசிரியரின் ஓய்வு அறையை ஒரு சிறிய பாராளுமன்றத்திற்கு ஒப்பிடலாம். பாடசாலைக்கான திட்ட வரைபுகள், செல்ல வேண்டிய திசைகள், பாடவிடயங்கள், கற்பித்தலுக்கான இற்றைப்படுத்தல் உத்திகள் போன்ற பலதரப்பட்ட விடயங்கள் இங்கு பேசப்படும். அதேவேளை பாடசாலை அபிவிருத்திக்கான பல தீர்மானங்களும் இங்கு முன்மொழியப்படும். மறுபக்கத்தில் தனிநபர், குழுக்களுக்கு இடையிலான கருத்து மோதல்கள், விமர்சனங்கள், தனிநபர் தாக்குதல்கள், விமர்சனங்கள் போன்றவையும் இங்கு இடம்பெற வாய்ப்புண்டு.

கட்சி மனப்பான்மை, குழுத்தீவிரவாதம், பொறாமை, இயலாமை, சுயநலம், போட்டி மனப்பாண்மை, தாழ்வு மனப்பாண்மை, கற்றல் கற்பித்தலில் ஆர்வமின்மை, ரியூசன் போட்டி போன்ற பல விடயங்கள் ஆசிரியர்களுக்கு இடையிலான ஆரோக்கியமான உறவுக்கு இடையூறுகளாக அமைந்து விடுவதுண்டு. சக மனிதர்களுக்கு கொடுக்க நேரமும் மனமும் இல்லாத இக்காலத்தில் உறவுகளைப் பயன்படுத்துவது சாத்தியமற்றது போல் தோன்றுகின்றது.


ஆசிரியரொருவர் தனது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை சிறப்புடனும். மனத்திருப்தியுடனும் செய்ய வேண்டுமெனில் சக ஆசிரியர்களோடு சுமூகமான உறவைப் பேணுதல் இன்றியமையாததாகின்றது. குடும்ப சந்தோசத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் குடும்ப அங்கத்தவர்களிடையே பல விட்டுக் கொடுப்புக்கள் இருப்பது போல் மாணவர்களின் முன்னேற்றத்திற்காக ஆசிரியர்களிடையே பல விட்டுக்கொடுப்புக்கள் இன்றியமையாததாகின்றது. பாடசாலையை ஒரு குடும்பமாக (அதிபர், ஆசிரியர், மாணவர்கள்) கருதி செயற்படும்போது உறவுகள் இலகுபடுத்தப்படுகின்றன.

மாணவர்களுக்கு தமது துறைசார் பாடத்தை குழுச்செயற்பாடுகள் (Group Activities) மூலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடசாலைச் செயற்பாடுகளையும் குழுவாகச் செய்ய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். தனியார் துறை வேலை வாய்ப்பில் ஓர் அணியாக செயற்படுதல் (Team Work) என்பது இன்றியமையாத திறமையாக (Skill) கருதப்படுகின்றது. ஆசிரியர்களும் இத்திறனை வளர்த்துக் கொள்ளும்போது ஆசிரியர்களுக்கிடையிலான உறவும் வளமுறுகின்றது.

தொடரும்.................

சென்ற இதழ் தொடர்ச்சி ..........

# பேராயர் ஆஸ்கார் ரொமேரோ



### 27. பேராயர் ரொமேரோ

எல் சால்வதோர் குடிமைப்போரின் விளிம்பில் இருந்தபோது ரொமேரோ 1977 பெப்ரவரி 23இல் நியமனம் செய்யப்பட்டார். தொழிலாளர்கள் கொல்லப்படுவது சர்வசாதாரணமான நிகழ்வானது. பாதிக்கப்பட்ட குடும்பம் மாத்திரமே சோகத்தில் ஆழ்ந்தது. முறைகேடான தேர்தல் நடாத்தி கார்லோஸ் ஹிம்பர்தோ எல் சால்வதோரின் குடியரசுத் தலைவரானார்.

தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட 8ஆம் நாள் முறைகேடான ஊழல் மிக்க தேர்தலைக் கண்டித்து ஆயிரக்கணக்கான மக்கள் வீதியில் போராடிய போது பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அதே மாதத்தில் மூன்று வெளிநாட்டு குருக்கள் அடித்து நாட்டை விட்டு வெளியே விரட்டப்பட்டனர். சால்வதோர் குருவானவர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு அடித்து சாகும் தருவாயில் அவரது அறையில் தள்ளப்பட்டார்.

### 28. ஊசலாடிய ரொமேரோ

ரொமேரோ உட்பட பல ஆயர்கள் இணைந்து ஞாயிறு திருப்பலியில் ஆலயத்தில் வாசிக்க, அரசுக்கு தங்கள் எதிர்ப்பை பதிவு செய்யும் கடிதத்தை தயார் செய்தனர்.

அக்கடிதத்தில் அரசு திருச்சபைக்கு செய்யும் தீங்குகள் உட்பட மனஉளைச்சல், விவசாயிகளுக்கெதிரான கொடுமை, கொலை மிரட்டல், அடிஉதை, குருக்களை அடித்தல், வெளியேற்றுதல், குறிப்பாக இயேசுசபை குருக்களுக்கு நடந்த அநீதி போன்றவை கருப்பொருளாக இருந்தது.

பேராயர் ரொமேரோவுக்கு ஓர் ஊசலாட்டம் இருந்தது. அரசின் கொடுமைகளை விளக்கும் இக்கடிதத்தை வாசிக்கும் முன் ஆயர் ரிவேராவை ரொமேரோ சந்தித்து தனது தயக்கத்தை வெளிப்படுத்தினார்.

ஆயர் ரிவேரா கடிதத்தை ஆலயத்தில் வாசிப்பது சரியானது தான் என ஆறுதல்படுத்தி ஊக்கப்படுத்தினார்.

### 29. ருட்டிலோ கிராண்டேயும் ரொமேரோவும்

1977ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் நாள் எல் பைஸ்நல் என்ற பகுதிக்குத் திருப்பலி நிறைவேற்றச் சென்ற இயேசுசபைக் குருவானவர் ருட்டிலோ கிராண்டே அவரோடு சென்ற முதியவர் மேலும் ஒரு சிறுவன் ஆகியோர் மறைந்திருந்த கொலைப்படையால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து மறைமாவட்ட குருவானவர் அல்போன்சோ நவாரோ கொல்லப்பட்டார். ரொமேரோ எல் பைஸ்நலுக்கு விரைந்து சென்று திருப்பலி நிறைவேற்றினார்.

ரொமேரோவுக்கு நெருக்கமான நம்பிக்கையான குரு கிராண்டே கொல்லப்பட்டது ரொமேரோவை சோகத்தில் ஆழ்த்தியது. ஆனால் அங்கே கூடியிருந்த கரும்புத்தோட்ட தொழிலாளிகளின் ஆழ்ந்த இறைநம்பிக்கை ரொமேரோவை சிந்திக்க வைத்தது. தந்தை ருட்டிலோ கிராண்டே ஒரு தீவிர முற்போக்கு சிந்தை கொண்ட குருவானவர். ரொமேரோவும் ருட்டிலோவும் பல ஆண்டுகளாக நண்பர்கள். வார்த்தையிலும் செயலிலும் ருட்டிலோ ஒரு கலகக்காரர். இவர் மறைமாவட்ட பத்திரிகை ஆசிரியராக இருந்தார்.

அவரது பெரும்பான்மையான கட்டுரைகள் கொரில்லாக்களை ஆதரித்தன. விடுதலை இறையியலை ஆதரித்தன. எனவே நண்பராக இருந்தாலும் ரொமேரோ அவரை அப்பொறுப்பிலிருந்து மாற்றினார். இதற்கு முன்பே ருட்டிலோ கம்யூனிச ஆதரவாளர் என அரசும் முத்திரை குத்தியிருந்தது.

### 30. குழப்பவாதி ரொமேரோ

கிராமப்புற சாலையோரம் கிராண்டேயும் அவரோடிருந்தவர்களும் சென்று கொண்டிருந்த போது சக்தி வாய்ந்த துப்பாகிக் குண்டால் தொலைவிலிருந்து சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அரசுக்கும் திருச்சபைக்கும் இடையே கொதி நிலையிலிருந்த கலனின்ன மூடி தூக்கி விடப்பட்டது. நாட்டின் கொல்லப்பட்ட ருட்டிலோ மற்றும் தோழர்களின் விசாரணையை எடுத்துக் கொள்ள வேண்டும் என ரொமேரோ நிர்ப்பந்தித்தார்.

கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிக் குண்டு இராணுவத்திற்குரியது என்ற அடிப்படையில் குடியரசுத் தலைவரிடம் இக்கோரிக்கை வைக்கப்பட்டது. பல கடிதங்கள், சந்திப்புக்களுக்குப் பிறகு, அரசு அதிகாரத்தை திருச்சபையால் எதுவும் செய்ய இயலவில்லை.

திருச்சபைக்கு நிர்ப்பந்திக்கும் திராணி இல்லை என உணர்ந்தார் ரொமேரோ. ஆகவே ஏதாவது மாற்றம் வேண்டுமென்றால் மக்கள் சக்தியை உசுப்பிவிட்டு அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் என்பது தான் அவருக்குக் கிடைத்த படிப்பினை. ஞாயிற்றுக்கிழமை சான் சால்வதோரின் அனைத்து ஆலயங்களிலும் ஆயரால் தயாரிக்கப்பட்ட கடிதம் வாசிக்கப்பட்டது.

உயர் மறைமாவட்டத்திற்கு வெளியிலும் பிற மறைமாவட்டங்களிலும் வாசிக்கப்பட்டது. இக்கடிதம் வாசிக்கப்பட்ட நேரத்திலிருந்து இவர் குழப்பவாதி என ரொமேரோவை அரசிலிருந்தவர்கள் அடையாளம் கண்டனர்.

### 31. போராளி ரொமேரோ

மேற்கண்ட நிகழ்வுகளால் ரொமேரோ மீண்டும் கடவுளால் அழைக்கப்பட்டதாக உணர்ந்தார்.

இரண்டு நாட்கள் கழித்து சான் சால்வதோர் பேராலயத்தில் 100 குருக்களோடு கிராண்டேவுக்கு திருப்பலி நிறைவேற்றினார். பேராலய பிளாசாவில் கூட்டமாக இருந்த இறைமக்கள் மத்தியில் கிராண்டேயும் அவரது இரு தோழர்களும் கிறிஸ்தவ விடுதலையின் இறைபணியாளர்கள்" என்று குறிப்பிட்டார்.

மேலும் ஒரு அருட்பணியாளர் பொதுநலனுக்காக தனது கடமையை நிறைவேற்ற சமூக நீதிக்கான நிலைப்பாடு எடுப்பதால் அவரை அரசியல்வாதியாகவோ அரசைக் கவிழ்க்கும் எண்ணம் கொண்ட சதி செய்யும் நபராகவோ கருதக் கூடாது" என்றார்.

எல் சால்வதோர் குடியரசுத் தலைவர், நாட்டில் நடக்கும் கொலைகளை முறையாக விசாரணை செய்ய வேண்டும் என ரொமேரோ கேட்டுக் கொண்டுள்ளார்.

பாரம்பரிய அணுகுமுறையில் அநீதிகள் குறித்து அப்பட்டமாக பேசாதிருப்பது அடக்குமுறைக்கும் ஊழலுக்கும், துணைபோவது என்ற உண்மை ரொமேரோவின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது.

எனவே அரசுத் தலைவர்கள் பங்கெடுக்கும் பொது நிகழ்ச்சிகளில் அவர்களோடு பங்கெடுப்பதில்லை என குடியரசுத் தலைவருக்குத் தெரியப்படுத்தினார்.

தொடரும்.............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தை வழி வாழ்வு



வார்த்தை:
இயேசு கூறுகிறார்:
'எவராவது உங்களை ஒரு கல் தொலை வரக் கட்டாயப்படுத்தினால்
அவரோடு இரு கல் தொலை செல்லுங்கள்' (மத்தேயு 5:41).


விளக்கம்:
இங்கே சம்பவம் நடக்கவில்லை. அவ்வாறு நடந்தால், அல்லது கேட்கப்பட்டால் உங்களது பதில் என்னவாக இருக்கும்.
பதிலளிக்க ஒருவருக்கு நான்கு விதமான வழிமுறைகள் உண்டு.

1.'ஆம் இதோ வருகிறேன்' என்று மனமகிழ்வுடன் கூறிவிட்டு அழைத்தவருடன் பயணிப்பது
2.'மன்னிக்கவும், என்னால் முடியாது, நான் என் மகளை வகுப்பிற்கு கூட்டிச்செல்ல வேண்டும்' என்றுகூறி உண்மையாகவே மறுப்பினைத் தெரிவிப்பது
3.'ஒருபக்கம் மனதார செல்ல விருப்பம் இல்லாமலும் இல்லை, மறுபக்கத்தில் செல்லவும் அவ்வளவு பிடிப்பில்லை இருப்பினும் நட்பு முறிவடைந்து போய்விடக்கூடாது' என்பதற்காக கூடவே பயணிப்பது
4.'செல்ல துளியளவும் விருப்பம் கிடையாது' ஆயினும் செல்ல வேண்டுமென்பதற்காக செல்லுதல்.

**செய்தி:**
மற்றவர்களுக்காக அதிலும் குறிப்பாக சிறப்புத் தேவையில் இருப்போருக்காக நமது நேரத்தை செலவிட தயாரா?

- ❖ வீடுகளிலும், வயோதிபர் இல்லங்களிலும் உள்ள தனிமையில் வாடும் வயோதிபருடன் சிறிது நேரத்தினை செலவிட நான் தயாரா?
- ❖ மனக்குழப்பங்களிலும், வேதனைகளிலும், கடன் தொல்லைகளிலும் சிக்கித் தவிப்பவருடன் எனது நேரத்தை செலவிட தயாரா?
- ❖ வீட்டில் நமது பிள்ளைகளுடன் சிறிது நேரத்தினை செலவிட தயாரா?
- ❖ பெற்றோரை இழந்த பிள்ளைகளின் பராமரிப்பு இல்லங்களிலும், சிறப்புத் தேவையுள்ள குழந்தைகள் காப்பகங்களில் சிறிது நேரத்தினை செலவிட தயாரா?
- ❖ போதைக்கு அடிமையானவர்கள், சிறையில் வாடுவோர், உறவுகளை இழந்தவர்கள் இவர்கள் போன்ற இன்னும் பலருடன் எனது சிறிய நேரத்தினை செலவிட தயாரா?

**கதை:**



ஒரு சிறுவன் தன் அப்பாவுடன் பேச வேண்டும் அல்லது தன் அப்பா தன்னுடன் சிறிது நேரத்தை செலவிட வேண்டுமென்பதற்காக ஏங்கிக் கொண்டிருந்தான். அதற்காக அப்பாவிடமும் பலதடவை கேட்டிருப்பான், ஆனாலும் நேர்மறையான பதில் அவனுக்கு கிடைக்கவேயில்லை. அப்பாவுக்கு அவரது உழைப்பும், தொழிலும் முக்கியமானதாக இருந்ததால் மகனுக்கு தன்னுடைய நேரத்தினை அவரால் கொடுக்க முடியவில்லை. ஒரு தடவை அப்பா வேலை முடிந்து வீட்டிற்கு திரும்பியபோது அப்பாவிடம் "அப்பா நீங்கள் ஒரு நாளைக்கு எவ்வளவு உழைப்பீர்கள்? என்று கேட்டான். அப்பா சற்று கோபத்துடன் விருப்பமின்றி "ஆயிரம் ரூபா" என்றார். எட்டு மணி நேர வேலைக்கு ஆயிரம் ரூபா எனில் ஒரு மணி நேரத்திற்கு நூற்றிருபத்தைந்து ரூபா என கணக்கிட்ட மகன் அப்பாவிடம் சென்று "எனக்கு ஐம்பது ரூபா தாருங்கள்" என்று கேட்டான். அப்பா கோபப்பட்டு "உனக்கெதுக்கு பணம், தரமுடியாது" என்று மறுத்து மகனைத் திட்டினார். அப்பாவின் பேச்சைக்கேட்டு கவலை கொண்ட மகன் இராவுணவும் உண்ணாது அழுதழுது உறங்கி விட்டான். அப்பாவும் பின்பு கவலைப்பட்டு அவனது தலையணைக்கு அருகில் அவன் கேட்ட ஐம்பது ரூபாவினை வைத்துவிட்டார். காலையில் பணத்தை கண்டு மகிழ்ந்த மகன் அவனுக்கு கிடைத்த ஐம்பது ரூபாவுடன் தான் வைத்திருந்த எழுபத்தியைந்து ரூபாவினை சேர்த்து அன்று மாலையில் அப்பா வீடு வரும்வரை காத்திருந்தான். அப்பா வந்தவுடன் ஒரு மணிநேர வேலைக்கான அந்த நூற்றிருபத்தைந்து ரூபாவினை அப்பாவிடம் கொடுத்து "அப்பா நாளைக்கு ஒரு மணி நேரம் முன்னதாக வீட்டிற்கு வந்து அந்த நேரத்தை என்னுடன் செலவிடுங்கள்" என்றான். அப்பா பேச்சற்றுப் போனார்.

குடும்பத்திற்காக ஓடுகிறோம் என்பவர்களே மறக்காதீர்கள், அந்த அவசரத்தில் குடும்பத்தை விட்டே ஓடிக்கொண்டு இருக்கிறீர்கள்.
பிள்ளைக்கு நல்ல சாப்பாடு கொடுக்க வேண்டுமென்பது முக்கியம்தான். அதைவிட முக்கியம் உங்கள் குழந்தையுடன் உட்கார்ந்து உண்ண வேண்டுமென்பது.

கடவுள் உங்களது ஆற்றலையல்ல, உங்களது நேரத்தையே (availability) எதிர்பார்த்து நிற்கின்றார்.
விருப்பமே காத்திருப்பின் சாட்சியாகும்.
அடுத்தவருக்காக உங்கள் நேரத்தை கொடுங்கள்.

**பிறிதொரு பகிர்வுடன்**
**அருட்பணி ...**

# மிகவும் சிந்திக்க வைத்த பதிவு



80 வயதுடைய ஒரு மனிதரின் இதயத்தில் ஆப்ரேஷன் நடந்தது. நல்லபடியாக நடந்து முடிந்தபின் அவரிடம் 8 இலட்சத்திற்கான பில்லை மருத்துவமனை அதிகாரிகள் கொடுத்தனர். அந்த பில்லை பார்த்தவுடன் அவரால் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை. அப்பெரியவரின் பரிதாபகரமான அழுகையைப் பார்த்த மருத்துவர் கூறுகிறார், அழாதீர்கள் தங்களுக்கு என்னால் முடிந்த அளவு பில்லை குறைத்து விடுகிறேன் என்றார். அதற்கு பெரியவரின் பதிலை என்னவென்று பாருங்கள்...... எனக்கு அது பிரச்சினை இல்லை, பில் 10 இலட்சமாக இருந்தாலும் என்னால் தர முடியும்......... ஆனால் 80 வருடமாக என் இதயத்தை பாதுகாத்த இறைவன் ஒரு ரூபாய் கூட பில் கேட்கவில்லையே! இவ்வளவு நாள் இதனை உணர்ந்ததே இல்லை. இப்பொழுது உணர்ந்தபோது கண்ணீர் வழிகிறது. மூன்று மணிநேரம் மட்டும் நீங்கள் பார்த்ததற்கு 8 இலட்சத்திற்கு பில்.... எல்லாம் வல்ல கடவுளின் கருணையையும் அன்பையும் நினைத்து அழுது விட்டேன் என்றார். சிந்திப்போம்.......

**ஆக்கம் : முகமட் காசிம் றொசில்டா**
**பாலையூற்று**

# இறைவனை வேண்டுவோம்......

## அருட்பணி N.C அருள்வரதன்



புதியதொரு ஆண்டிலே
அடியைத்துவிட்டோமே
முடிந்துவிட்ட ஆண்டோடு
முடியட்டும் துயரங்கள்
பிறந்துள்ள ஆண்டிலே
நிறைந்த நன்மைகள் உதயமாக
இணைந்தே இறைவனை
வேண்டுவோமே

அன்பினை மறந்துவிடாமல்
நியாயங்களை உதாசீனம் செய்யாமல்
நீதியை நிலைநாட்ட
ஒன்றாக வேண்டுவோமே
நீதியே மறையாமலே
நிலைகொள்ள வேண்டுவோமே

வெள்ள அனர்த்தங்கள்
இயற்கையின் அறிவுகள் இவைகள்
வந்து சென்று போனாலும்
நம்மால் முடிந்ததை
நிறைந்த மனங்களுடன்
கொடுக்கும்போது
இறைவன் நம்மோடு இருப்பது
உண்மையாகிறதே

மலையக மக்களின்
வேதனைப் பிரச்சினைகள்
தீர்க்கப்பட வேண்டியதே
இன்னும் காலங்களை நீடிக்காது
தீர்வினை அவர்களுக்கு
கொடுக்கும்போது
அமைதியின் வருடத்தில்
ஆறுதல் தெரியுமே

புதிய ஆண்டிலே
புதியவைகள் காண வேண்டுமே
மொழியால் பேதங்கள் வேண்டாமே
மொழி என்றோ இனமென்றோ
மதங்களென்றோ
பேதங்களைக் காட்டி
வெறுப்புக்களை உருவாக்கும்போது
உறவுகளே மறந்துபோகுமே
வேண்டாமே இவ்வாண்டில்
எவ்வித பேதங்களுமற்ற
உறவுகள் மலர வேண்டுமென்று
ஒன்றாக இறைவனை வேண்டுவோமே



# குட்டிக்கதை ஒன்று

## Fr. N.C

**வளரும் பயிர்கள்**

ஒரு கிராமத்திலே இரண்டு குடும்பங்கள். இரண்டு குடும்பங்களும் பக்கத்துப் பக்கத்து வீடுகள். இரு வீட்டாருக்குமிடையே உறவிலே எந்தத் தொடர்புமில்லை.

ஆனால் இரு வீட்டிலுமுள்ள இரண்டு சிறுவர்கள் ஒன்றாகப் படிப்பவர்கள். அவர்கள் இருவரும் பழகுவது பேசுவது விளையாடுவது இவர்களின் வீடுகளிலே என்ன சொன்னாலும் பேசக்கூடாது, பழகக்கூடாது, வீட்டிற்குப் போகக் கூடாது என்று என்ன சொன்னாலும் அவர்கள் கேட்பதில்லை.

இந்த இரண்டு குடும்பங்களிலுமுள்ள ஒரு குடும்பத்தின் தந்தை தன் மனைவியிடம் சொல்கின்றார் "நாம் அந்தக் குடும்பத்தோடு உறவுகளை விட்டாலும் நமது மகன் அங்கு போகிறான், பழகுகிறான், விளையாடுகிறான் அவனைத் தடுக்க வேண்டாம். நமது பகை நம்மோடு போகட்டும், அவனது விருப்பப்படி செய்ய அவனைத் தடுக்க வேண்டாம்" என்று. அதற்கு மனைவி சொல்கிறார் "நானும் அதைத்தான் நினைத்தேன், ஆனால் நீங்கள் அதைச் சொல்லிப்போட்டீங்க!

உண்மையிலேயே நல்லதை விதைத்தால் நல்லதையே அறுவடை ... என்பது இவர்களின் வாழ்வில் உண்மையாகியுள்ளதல்லவா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வாக்கு வாசிப்பு வரலாறு

**1. முன்னுரை**

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் இறைவெளிப்பாடு என்னும் ஏடு கிறிஸ்தவ அருள் வாழ்வில் வளர்ச்சி பெறுவதற்கு நாம் ஒவ்வொருவரும் விவிலியத்தை எடுத்துப்படித்தல் வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது. மேலும் விவிலியத்தைப் படிப்பதற்கு "அருள்வாக்கு வாசிப்பு" முறையை பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறது. திருஅவையின் மறைக்கல்வி நூலும் (எண் 109-119) திருஅவையின் பொருள்கோள் முறை ஏடும் முறையே அருள்வாக்கு வாசிப்பு முறையை நம் கத்தோலிக்கருக்கு கற்றுத் தருவது நலம் பயக்கும் என்று பரிந்துரை செய்கின்றன.

**2. இறைவெளிப்பாடு ஏட்டின் நாற்பதாம் ஆண்டு**

இறைவெளிப்பாடு ஏடு வெளியிடப்பட்டதின் நாற்பதாம் ஆண்டுக் கொண்டாட்டம் 2005ஆம் ஆண்டு செப்டம்பர் 14-18ல் உரோமையில் "திருஅவையின் வாழ்வில் திருவிவிலியம்" என்னும் தலைப்பில் அகில உலக விவிலிய மாநாடாக நடைபெற்றது. இம்மாநாட்டின் நிறைவில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களும் மற்றும் இம் மாநாட்டில் சொற்பொழிவுகள் நிகழ்த்திய விவிலிய அறிஞர்கள் பலரும் நாம் வாழும் இந்தக் காலத்தில் "அருள்வாக்கு வாசிப்பு முறையை" நம் அனைவர் மத்தியிலும் பிரபல்யமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இக்கட்டுரையில் அருள்வாக்கு வாசிப்பு முறையின் வரலாறு பற்றி தெரிந்து கொள்வோம்? நாமும் விவிலியத்தை எடுத்துப் படித்து வளம் பெறுவோம்.

**3. அருள்வாக்கு வாசிப்பு முறை என்றால் என்ன?**

அருள்வாக்கு வாசிப்பு முறை என்ன? என்று அறியுமுன் அது என்ன என்று தெளிவுபடுத்துவது நலம் பயக்கும். அருள்வாக்கு வாசிப்பு முறை என்பது மறையுரை அல்ல. மறைக்கல்வி வகுப்பு அல்ல. அருங்கொடை செபக்கூட்டம் அல்ல. விவிலியத்தை வெறுமனே வாசிப்பது மட்டும் அல்ல.

அருள்வாக்கு வாசிப்பு முறை என்பது விவிலியத்தில் உள்ள வார்த்தைகளில் பொதிந்துள்ள கடவுளின் செய்தியை இன்றைய நம் சூழலுக்குப் புரிந்துகொள்ள உதவும் ஒரு முறை. இந்த வாசிப்பு முறையை யூத ராபிகள் பயன்படுத்தியுள்ளனர். ஆதலின் இது ஒரு புதிய முறை அல்ல. மாறாக, மிகப் பழமையான அதே வேளையில் மிக வளமையான ஒரு முறையாகும்.

**4. திருஅவையின் வரலாற்றில் அருள்வாக்கு வாசிப்பு முறை**

திருஅவையின் வரலாற்றில் இந்த அருள்வாக்கு வாசிப்பு முறையை திருஅவைத் தந்தையர்கள் மற்றும் புனிதர்கள் பயன்படுத்தியுள்ளார்கள். கர்தினால் மரிய மார்த்தீனி அவர்களின் கூற்றின்படி அருள்வாக்கு வாசிப்பு என்பது விவிலியத்தை செபிக்கும் புத்தகமாக ஆக்கும் ஒரு முறையாகும். அதாவது, விவிலிய வார்த்தைகளில் கடவுளின் இறைவெளிப்பாட்டை இன்றைய நம் வாழ்வுக்கு கண்டு பிடிக்கும் ஒரு கலை ஆகும்.

ஒருவர் மன்றாடும்பொழுது அவரது நினைவு, நுண்ணறிவு, திருச்சித்தம் ஆகியவை இணைந்து செயல்படுகின்றன என்பார் புனித அகுஸ்தினார். நாளடைவில் இந்த மூன்றும் ஒன்றரக் கலந்து விவிலியத்தின் பகுதிகளை அல்லது நம்பிக்கை மறை உண்மைகளை சிந்திக்கும் ஒரு பழக்கத்திற்கு வழிகோலியது. இந்த சிந்திக்கும் முறையை முறையாய்ப் பயன்படுத்தி நற்செய்தியின் பகுதிகளை சிந்திக்கும் வழிமுறையை புனித லொயோலா இஞ்ஞாசியார் தமது ஆன்மீகப் பயிற்சிகள் என்னும் நூலில் நமக்குத் தந்துள்ளார். அவரது ஆன்மீகப் பயிற்சிகளின் இரண்டாம் வாரத்தில் 'ஆழ்நிலை காட்சித் தியானம்' என்ற ஒரு பகுதி உள்ளது. அது நுண்ணறிவுக்கு வேலைகொடுத்து நற்செய்தி நூலின் ஒரு பகுதியை, மன்றாடும் மனநிலையோடு சிந்தித்து ஈடுபட அழைப்பு விடுப்பதாகும். கிறிஸ்தவ செபத்தின் பண்புகளைப் புரிந்துகொள்வதற்கு இந்தக் கருத்துக்கள் முக்கியமானவை ஆகும். இந்தப் பின்னணியில் அருள்வாக்கு வாசிப்புமுறை என்றால் என்ன? என்பது பற்றித் தெளிவு பெறுவோம்.

மிகப் பழமையான இந்த அருள்வாக்கு வாசிப்பு முறை நம் தாய் திருஅவையில் குறிப்பாக புனித ஓரிஜன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஓரிஜன்தான் அருள்வாக்கு வாசிப்பு (Lectio Divine) என்னும் பெயரையே இம்முறைக்குச் சூட்டினார் என்றும் சொல்லப்படுகிறது. திருஅவையின் வரலாற்றில் துறவற சபைகள் பாலை நிலங்களில் தோன்றி வளர்ந்தபோது அவர்கள் திருவிவிலிய வார்த்தைகளைக் கேட்பது, சிந்திப்பது, மன்றாடுவது என்னும் முறைகளைப் பயன்படுத்தி அருள் வாழ்வில் வளர்ச்சி கண்டார்கள். துறவற சபைகள் வளர்ச்சி பெற்றதற்கும் துறவிகளின் வாழ்வில் மாற்றங்களும் ஏற்றங்களும் மறுமலர்ச்சிகளும் உருவானதற்கும் இந்த அருள்வாக்கு வாசிப்பு முறையே அடிப்படைக் காரணமாய் அமைந்திருந்தது. புனித அகுஸ்தின், புனித பெனடிக்ட் ஆகியோரின் துறவு சபைகளில் திருவிவிலியத்தை வாசித்தல், உடல் உழைப்பை நல்குதல், திருவழிபாட்டில் இறைவனைப் புகழ்தல் ஆகியவை அடிப்படை கட்டமைப்புகள் ஆகும். இங்கே துறவற வாழ்வில் அருள்வாக்கு வாசிப்புமுறை என்பது முதுகெலும்பாய் இருந்தது தெள்ளத் தெளிவாகிறது.

இந்த அருள்வாக்கு வாசிப்பு முறையில் நான்கு நிலைகள் இருந்ததைப் பற்றிய முதல் குறிப்பு கி.பி. 1150ஆம் ஆண்டு வாழ்ந்த குய்கே என்னும் கர்த்தூசியன் துறவி எழுதிய "துறவிகள் ஏணி" என்னும் நூலில் காணப்படுகிறது. அவை முறையே 1) வாசித்தல், 2) சிந்தித்தல், 3) மன்றாடுதல், 4) ஆழ்நிலை-காட்சி தியானம் செய்தல்.

புனித பிரான்சிஸ், புனித தோமினிக் மற்றும் கர்மேல் சபைகளின் அடிப்படை ஒழுங்குகளிலும் இந்த அருள்வாக்கு வாசிப்பு முறை இருப்பதனை நாம் காணலாம். மிகவும் குறிப்பாக, புனித அவிலா தெரசம்மாளின் எழுத்துக்களில் கர்மேல் சபையின் ஆன்மீகம் என்று தனியாக ஒன்றும் இல்லை என்றும், கர்மேல் சபை ஆன்மீகம் என்பதே அருள்வாக்கு வாசிப்பு முறையின் அடிப்படையில் அமைந்த ஒன்று என்றும் சொல்லப்பட்டுள்ளது, அருள்வாக்கு வாசிப்பு முறையின் சிறப்பை வலியுறுத்துகிறது.

**5. சீர்திருத்தக் காலத்தில் ஏற்பட்ட தளர்ச்சி**

இவ்வாறு இயேசுவின் சீடத்துவ வாழ்வுக்கும் அதன் வெளி அடையாளமான துறவு வாழ்வுக்கும் அடிப்படையாய் பயன்பட்ட இந்த அருள்வாக்கு வாசிப்பு முறை கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு அதிகமாகப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படவில்லை.

மார்டின் லூத்தர் போன்ற சீர்திருத்தவாதிகள் வரம்பு மீறிய முறையில் திருவிவிலியத்தைப் பயன்படுத்தி விளக்கம் கூறுவதை கட்டுப்படுத்தும் நோக்குடன் கி.பி. 1564ல் திரிதெந்துச் சங்கம் தாய்மொழியில் விவிலியத்தை வாசிப்பதற்குத் தடை விதித்தது. ஆதலின் இக்கால முதல் திருவிவிலிய வாசகத்திற்குப் பதிலாக ஞான வாசகம் இடம்பெறலாயிற்று. சீர்திருத்த திருஅவைகளைப் பற்றிய அச்சம் நிலவிய காரணத்தால் அருள் வாழ்வின் ஊற்றாகிய திருவிவிலியத்துடன் இறைமக்கள் நேரடி தொடர்புகொள்வது இயலாது போயிற்று. இந்த இடைக் காலத்தில் மாற்று ஆன்மீகப் பக்தி முயற்சிகள் தோன்றலாயின. நவநாட்கள், திருச் செபமாலை, நற்கருணை ஆராதனைகள், நீண்ட ஆராதனை போன்றவை ஆகும். பரவச அனுபவத்தை இப்பக்தி முயற்சிகள் ஊட்டினாலும் இவை தூண்டும் நம்பிக்கை உணர்வு ஆழமானதாய் இல்லாது போயிற்று. மேலும் மனிதனின் வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கும் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சாரம், பண்பாடு போன்ற துறைகளில் எத்தகைய தாக்கத்தையும் இப்பக்தி முயற்சிகள் கொண்டு வரவில்லை. பக்தி முயற்சிகளால் கிடைக்கும் பரலோக அனுபவம் வேறு, நமது அன்றாட வாழ்வில் உலகில் நாம் சந்திக்கும் பிரச்சனைகள் வேறு என்று இங்கே வாழ்வு இரண்டுபட்டுப்போனது. திருவிவிலியத்தில் வேரூன்றாத பக்தி முயற்சிகளோ, கோட்பாடுகளோ, தனிமனிதனையோ, குடும்பத்தையோ அல்லது சமூகத்தையோ கட்டி எழுப்ப இயலாது என்பதால் இக்காலத்தில் தளர்ச்சி ஏற்பட்டது.

**6. இரண்டாம் வத்திக்கான சங்கம் ஏற்படுத்திய மறுமலர்ச்சி**

நம் தாய்த் திருஅவையில் நிலவிய இந்தக் குறைபாடுகளைப் பயன்படுத்தி பல நற்செய்தி சபைகளும் பெந்தகோஸ்தே இயக்கங்களும் கத்தோலிக்க ஆடுகளை களவாடிச் சென்றன. மேலும் இந்தக காலக் கட்டத்தில் புனித பிரான்சிஸ்கு சவேரியார் போன்ற பல நற்செய்திப் பணியாளர்களால் புதிய நாடுகளில் கத்தோலிக்கத் திருஅவை வேரூன்றலாயிற்று. புதிய சூழலில் மக்களின் தேவைகளுக்காக திருவிவிலியம் மொழி பெயர்க்கப்பட்டது. தத்தம் தாய் மொழிகளில் நம் கத்தோலிக்க மக்கள் விவிலியத்தைப் படிக்க ஆரம்பித்தார்கள். மேலும் விவிலியத்தை வாசிப்பதன் அவசியத்தை மேலை நாடுகளிலும் உணர ஆரம்பித்தார்கள். விவிலியத்தை வாசித்தவர்கள் சீர்திருத்தக் காலத்தின் எதிர்ப்புக் கண்ணோட்டத்தில் திருஅவையை விமர்சனம் செய்யவில்லை. மாறாக, விவிலியத்தின் மதிப்பீடுகளை உள்வாங்கி திருஅவைக்கு உப்பாக, புளியாக சான்றுபகர முயன்றார்கள். திருஅவையின் பணிகளில் ஆர்வமுடன் பங்கெடுத்தார்கள். திருஅவையை வளர்த்தெடுக்கும் புதிய அமைப்புகளை, இயக்கங்களை, நற்செய்தி விழுமியங்களின் ஒளியில் உருவாக்கினார்கள். இந்த அமைப்புகளும் இயக்கங்களும் நற்பயன் தருவதன் பண்புகளை கண்டறிந்த இரண்டாம் வத்திக்கான் சங்கம் இந்த அருள்வாக்கு வாசிப்பு முறையை அதாவது விவிலியத்தை எடுத்துப்படித்து அதில் இறைச் செய்தியை கண்டுபிடிக்கும் கலையை முறையாக ஊக்குவித்தது. ஆகவே குருநிலையினரும் பொதுநிலையினரும் விவிலியத்தை எடுத்துப் படித்தல் வேண்டும் என்று இறைவெளிப்பாடு எண் 25 பரிந்துரைப்பது குறிப்பிடத்தக்கது.

**7. முடிவுரை**

திருஅவையின் வரலாற்றில் 12, 13, 16 ஆகிய நூற்றாண்டுகளில் திருவிவிலியத்தை வாசிக்கக்கூடாது என்கிற தடை இருந்தது. புனித தெரசா போன்ற திருவிவிலியத்தை நேசித்த புனிதரகள் கூட பழைய ஏற்பாட்டின் முழுப் பகுதிகளை வாசிக்க முடியவில்லை. சீர்திருத்தக் காலங்களில் ஏற்பட்டக் காயங்களினாலும் தோன்றிய ஐயங்களினாலும் தனி மனிதர்கள் விவிலியத்தைப் படித்து தான்தோன்றித் தனமாக விளக்கிக் குழப்பிவிடுவார்கள் என்னும் பயத்தில் இத்தகைய தடைகள் அக்காலத்தில் நிலவின. ஆனால் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் திருவிவிலியத்தைப் பற்றிய புதிய புரிதல் நமக்குத் தரப்பட்டுள்ளது. "திருஅவையின் வாழ்வில் விவிலியம" படிக்கப்படும் என்றால், மேலும் அருள்வாக்கு வாசிப்பு முறையில் திருவிவிலியம் செபிக்கப்படும் என்றால், வாழும் கடவுளின் இறைவெளிப்பாட்டை இன்றையச் சூழலில் நாம் கற்றுக்கொள்ள இயலும் என்பது திருஅவையின் போதனையில் தெளிவாக்கப்பட்டுள்ளது. ஆதலின் ஒவ்வொரு கிறிஸ்தவரும் திருவிவிலியத்தை எடுத்துப் படித்து இறைச் செய்தியைப் புரிந்து தந்தையின் முழு வெளிப்பாடான இயேசுவில் நம்பிக்கை கொண்டு வாழ்வு பெறுவோமாக.

ஆயர் தேவதாஸ் அம்புரோஸ் - தஞ்சாவூர்
பாதைகாட்டும் விவிலிய விருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பங்குனி 2019 | | |
|---|---|---|
| தொடக்கநூல் | மத்தேயு | திருப்பாடல் |
| 01) 41:1-36 | 11:28-30 | 45:1-17 |
| 02) 41:37-57 | 12:1-8 | 46:1-11 |
| 03) 42:1-24 | 12:9-14 | 47:1-9 |
| 04) 42:25-38 | 12:15-21 | 48:1-14 |
| 05) 43:1-34 | 12:22-32 | 49:1-20 |
| 06) 44:1-17 | 12:33-37 | 50:1-23 |
| 07) 44:18-34 | 12:38-42 | 51:1-19 |
| 08) 45:1-28 | 12:43-45 | 52:1-9 |
| 09) 46:1-27 | 12:46-50 | 53:1-6 |
| 10) 46:28-47:12 | 13:1-9 | 54:1-7 |
| 11) 47:13-31 | 13:10-17 | 55:1-23 |
| 12) 48:1-49:28 | 13:18-23 | 56:1-13 |
| 13) 49:29-50:14 | 13:24-30 | 57:1-11 |
| 14) 50:15-21 | 13:31-33 | 58:1-11 |
| 15) 50:22-26 | 13:34-35 | 59:1-17 |
| விடுதலைப் பயணம் | மத்தேயு | திருப்பாடல் |
| 16) 1:1-22 | 13:36-43 | 60:1-12 |
| 17) 2:1-10 | 13:44 | 61:1-8 |
| 18) 2:11-25 | 13:45-46 | 62:1-12 |
| 19) 3:1-23 | 13:47-50 | 63:1-11 |
| 20) 4:1-17 | 13:51-52 | 64:1-10 |
| 21) 4:18-31 | 13:53-58 | 65:1-13 |
| 22) 5:1-21 | 14:1-12 | 66:1-20 |
| 23) 5:22-6:1 | 14:13-21 | 67:1-7 |
| 24) 6:2-13 | 14:22-33 | 68:1-18 |
| 25) 6:14-27 | 14:34-36 | 68:19-35 |
| 26) 6:28-7:7 | 15:1-20 | 69:1-18 |
| 27) 7:8-13 | 15:21-28 | 69:19-36 |
| 28) 7:14-25 | 15:29-31 | 70:1-5 |
| 29) 8:1-15 | 15:32-39 | 71:1-24 |
| 30) 8:16-19 | 16:1-4 | 72:1-20 |
| 31) 8:20-32 | 16:5-12 | 73:1-28 |

"ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும்" (எசா 40:8)



| சித்திரை 2019 | | |
|---|---|---|
| விடுதலைப் பயணம் | மத்தேயு | திருப்பாடல் |
| 01) 9:1-7 | 13:13-20 | 74:1-23 |
| 02) 9:8-12 | 16:21-28 | 75:1-10 |
| 03) 9:13-35 | 17:1-13 | 76:1-12 |
| 04) 10:1-20 | 17:14-21 | 77:1-20 |
| 05) 10:21-29 | 17:22-23 | 78:1-31 |
| 06) 11:1-10 | 17:24-27 | 78:32-55 |
| 07) 12:1-13 | 18:1-5 | 78:56-64 |
| 08) 12:14-20 | 18:6-9 | 78:65-72 |
| 09) 12:21-28 | 18:10-14 | 79:1-13 |
| 10) 12:29-36 | 18:15-20 | 80:1-19 |
| 11) 12:37-42 | 18:21-35 | 81:1-16 |
| 12) 12:43-51 | 19:1-12 | 82:1-8 |
| 13) 13:1-10 | 19:13-15 | 83:1-18 |
| 14) 13:11-16 | 19:16-30 | 84:1-12 |
| 15) 13:17-22 | 20:1-16 | 85:1-13 |
| 16) 14:1-31 | 20:17-19 | 86:1-17 |
| 17) 15:1-18 | 20:20-28 | 87:1-7 |
| 18) 15:19-21 | 20:29-34 | 88:1-18 |
| 19) 15:22-27 | 21:1-11 | 89:1-13 |
| 20) 16:1-36 | 21:12-17 | 89:14-37 |
| 21) 17:1-7 | 21:18-22 | 89:38-52 |
| 22) 17:8-16 | 21:23-27 | 90:1-17 |
| 23) 18:1-12 | 21:28-32 | 91:1-16 |
| 24) 18:13-27 | 21:33-46 | 92:1-15 |
| 25) 19:1-25 | 22:1-14 | 93:1-5 |
| 26) 20:1-17 | 22:15-22 | 94:1-23 |
| 27) 20:18-21 | 22:23-33 | 95:1-11 |
| 28) 20:22-26 | 22:34-40 | 96:1-13 |
| 29) 21:1- | 22:41-46 | 97:1-12 |
| 30) 21:12-27 | 23:1-36 | 98:1-9 |
| | | |

"கடவுளின் ஒவ்வொரு வாக்கும் பரிசோதிக்கப்பட்டு
நம்பத்தக்கதாய் விளங்குகிறாய்"
( நீ. மொ : 30: 5)

# நாம் கண்ட கஷ்டங்களும் ஆண்டவரின் துணையும்



அன்றாடம் கஸ்டங்கள் நாம் கண்டிடினும்
ஆண்டவர் தந்த ஆத்தமாவை அழகாய் வைத்திடுவோமே
தாகத்தில் நாம் தவித்திடினும்
ஜீவத்தண்ணீருக்காய் காத்திருப்போம்
ஒருவேளை உணவின்றித் தவித்தாலும்
ஒருபோதும் உயிர் தந்த உன்னதனை மறவோமே
பச்சமிளகாயும் சோறும் நாமுண்ட போதிலும்
பரிசுத்தரை ஒருபோதும் பரீட்சித்துப் பார்த்ததில்லை
தக்காளி சாதம் நாம் உண்ட போதிலும்
தயவு எம்மில் குடி கொண்டது
பால் சொதியும் சோறும் நாம் உண்ட போதிலும்
சோதனைகளைத் தாங்கி ஜெயம் பெற்றோம்
ரசமும் சோறும் நாம் உண்ட போதிலும்
சர்வ வல்லவரின் நிழலில் தங்கி நின்றோம்
அயலானின் அன்பில் நிலைத்திருந்தோம்
அனுதினம் கூடி நாம் உண்டோம்
குடும்பமாய் தினம் செபித்திடுவோம்
ஆடம்பர வாழ்க்கை வாழ காசு வேண்டாம்
அன்றாடம் வாழ்வளிக்கும் ஆண்டவர் துணை வேண்டும்
எந்நிலையிலும் சந்தோசம் நிறைந்த குடும்பம் எம் குடும்பம்
நீங்களும் வாழ வழி ஒன்றைக் கூறுகின்றார் நம் இயேசு
மனிதர் அப்பத்தினால் மட்டும் உயிர் வாழ்வதில்லை
இறைவார்த்தையாலும் ஊட்டம் பெறுகின்றான்
என்கின்றார் நம் இயேசு
உணர்ந்திடுங்கள் சந்தோஷமாய் வாழ்ந்திடுங்கள்

ஆக்கம் : சு. கௌசல்யா
பாலையூற்று

# அன்றாட வாழ்வில் தத்துவங்கள்

## 1. புறங்கூறுதல்

ஒருவர் இல்லாத போது அவரைப் பற்றி பிறரிடம் இழிவாகப் பேசுவதையும் அவர் செய்த குற்றங்களைப் பெரிதுப்படுத்திக் கூறுவதையும் புறங்கூறுதல் என்கின்றோம். புறணி பேசும் விருப்பம் பொறாமையின் வெளித்தோற்றமே.

பல கொலைகளையும், கொள்கைகளையும் செய்யும் கொடிய பாவத்தைவிடப் புறங்கூறுதல் மிகவும் கொடியது என

"அறனழிஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழிஇ பொய்த்து நகை

என்று வள்ளுவர் கூறுகிறார்.

வகுப்பிலே இராணி நன்றாகப் படிக்கக் கூடியவள். ஆனால் ராதாவுக்கோ இது பொறாமையாக இருந்தது. இது நாளுக்கு நாள் வளர்ந்து இராணியின் பெயரைக் கெடுக்க வேண்டும் என எண்ணினாள். இராணி இல்லாத சமயத்தில் அவளைப்பற்றிய தவறான வதந்திகளைப் பரப்பினாள். இதனால் மற்றப் பிள்ளைகள் இராணியோடு பழகாமல் ஒதுங்கியே இருந்தனர். ஒருநாள் இந்த விடயம் அம்பலத்துக்கு வந்தது. இராதா இராணியைப் பற்றி ஆவலாதி அவதூறு கூறியுள்ளாள் என்பது எல்லோருக்கும் தெரிந்துவிட்டது.

ஒருவர் இல்லாத போது அவரைப் பற்றி எம்மிடம் யாராவது வந்து இருளான வார்த்தைகளைக் கூறக்கூடும். அப்படிக் கூறியதன் பின்பு அவரைப் பற்றி எமது மனதில் இருள் வருகிறது. அந்த நபரிடம் சென்று இப்படி இப்படியெல்லாம் உங்களைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்களே என்று நாமும் சொல்வதில்லை. ஆனால் அவரைப் பற்றி நாமும் இருளாக எண்ணுகின்றோம்.

சில வேளைகளில் 'உங்களைப் பற்றி இந்த நபர் கூடாத விதத்தில் இப்படியெல்லாம் கூறினார்' என்று ஒருவர் வந்து எம்மிடம் கூறலாம். அப்போது அவரிடம் "நீங்கள் கூறியதாக நான் அந்த நபரிடம் கேட்டுப் பார்க்கவா?" என்று கேளுங்கள். உடனே அவர் 'ஐயோ நான் சொன்னதாகச் சொல்ல வேண்டாம்' என்று கூறினால் அது ஆவலாதி அவதூறு என்பதை இனங்கண்டு கொள்ளுங்கள்.

இன்று காரியாலயங்களில், இல்லங்களில் ஆவலாதி அவதூறு, புறங்கூறுதல் மலிந்து காணப்படுகின்றது. இதனால் பல பிரச்சினைகள், சண்டைகள், பிளவுகள் ஏற்படுவதைக் காணலாம்.

நாம் மற்றவர்களது குறைகளையே பார்க்கப் பழகாது, முதலில் எமது குற்றங்களை நோக்க வேண்டும். எல்லோருமே குறைபாடு உள்ளவர்கள் தான் என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். ஒருவர் இல்லாதபோது அவரது குறைகளைப் பெரிதுப்படுத்திக் கூறுவதை நாம் தவிர்த்துக் கொள்வதையும், ஒருவர் இல்லாதபோது அவரைப்பற்றி இழிவாகப் பேசுவதையும் நிறுத்தினால் இன்று எத்தனையா பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும் அல்லவா?

சிந்தனைக்கு......................

❖ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் செலவழித்து ஓடம் செய்து, துடுப்புச் செய்ய மறந்தான். அவன் நடுக்கடலில் தத்தளித்த போது காரணமறியாது தவித்தான்.

❖நீ உலகுக்கு நல்லதைச் செய்ய நினைக்குமுன் மற்றவர்கள் நீ அவர்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்பதை எண்ணிப்பார்.

❖உண்மை சோதிக்கப்படும்பொழுது அதன் மதிப்பு உயருமே ஒழிய குறையாது.

❖கற்கள் என்பதற்காக யாரும் அவற்றை ஒதுக்கி விடுவதில்லை. நீ ஒரு அறிவுள்ள கலைஞனாக இருந்தால் கல் மனிதர்களைப் பயன்படுத்தி அழகான சமுதாயக் கட்டிடங்களை கட்டி எழுப்பலாம்.

❖உன் தோள்கள் வலித்தால் கடவுளுடைய தோள்களைப் பற்றிக்கொள். உன் கைகள் கடுத்தால் கடவுளின் கைகளைப் பிடித்துக் கொள். உன் உள்ளம் சோர்ந்து விட்டால் ஆண்டவனுடைய உள்ளத்திற்குள் புகுந்துகொள். உன் வாழ்வில் நீ தோற்றுப்போனால் இறைவனின் வெற்றியில் நேர்ந்து கொள்.

நன்றி - எஸ். ஜே. யோகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கின் ஆரம்பம் | கிறிஸ்து அரசர் ஆலயம், கன்னியா

எமது மறைமாவட்டம் உருவாகி 125வது யூபிலி ஆண்டை கடந்த ஆண்டு நாம் கொண்டாடினோம். இக்காலப் பகுதிகளிலே எமது மறைமாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பங்குகளினதும் ஆரம்பகாலம், இக்காலம். மக்களின் வாழ்க்கை நிலை, புவியியல் அமைவிடம், போன்ற சில விடயங்களை, குறித்த பகுதிகளிலே வாழ்ந்து வருகின்றவர்களிடம் வாய்மொழியாகக் கேட்டுப் பெற்றுக் கொண்டு அதனை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். அதற்கு முன்னர் பொதுவாக அநேகரை ஆட்கொண்ட விடயம் ஒன்று. தற்கால தலைமுறையினரிடம் உங்கள் பங்குளின் கிராமத்தின் ஆரம்பகாலம் எவ்வாறு இருந்தது எனக் கேட்டால் அநேகருக்கு அது தெரிந்திராத ஒன்றாகவே இருந்தது. எல்லாமே அநேகமாக இலகுவாகக் கிடைத்து விடுவதால் அனைத்தையும் நாம் அவ்வாறே எண்ணிக் கொண்டிருக்கின்றோம். அக்காலத்தில் அவ்வளவு இலகுவாக அவர்கள் அனைத்தையும் செய்து விடவில்லை. மிகுந்த கஸ்டங்களுக்கு மத்தியில் சிறிது சிறிதாக அனைவரும் இணைந்து ஒற்றுமையாக அனைத்தையும் செய்திருக்கிறார்கள். அங்கே ஓர் ஒன்றிப்பு இருந்திருக்கின்றது.







இக்காலப் பகுதிகளில் பொதுவாகப் பார்க்கின்ற போது எம்மிடம் வழங்கப்பட்ட அனைத்தையும் அனுபவிக்கின்றோம். இணைந்து ஒற்றுமையாக செயற்பட அனைவரும் தயங்குகின்றோம். ஒவ்வொரு விடயங்களிலும், ஒவ்வொருவரிலும் ஒவ்வொரு இடத்திலும் வேற்றுமைகளும் மாற்றுக் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளாத் தன்மையும் கத்தோலிக்க விழுமியங்களை மறந்த வாழ்க்கையும், மனித மாண்புகளும் மறைந்து போகக் காரணமென்ன? எம்முடைய அடையாளங்கள் மறைந்து போவதேன் அல்லது நாமே மறைத்துக் கொண்டிருப்பதேன்? எம்மை மூடி இருப்பதென்ன?

சில சமயங்களில் நமது புத்திசாலித்தனம் அடுத்தவரை அழிக்கவே அதிகம் பயன்படுகின்றது. நாம் நிறைய யோசிக்கின்றோம். ஆனால் சிறிய அளவு தான் செயற்படுகின்றோம். பேராசையும் பொறாமையும் எம்மைக் கட்டுப்படுத்துகின்றது. தொழில்நுட்ப வளர்ச்சியால் உலகம் மட்டுமல்ல மனிதனும் சுருங்கி விட்டான். அவனுடைய மாண்புகளும் பிறப்பின் உன்னதங்களும் சுருங்கி விட்டன. முகமூடி அணிந்து கொண்டு வாழவே ஆசைப்படுகின்றான். இவற்றுக்கெல்லாம் காரணமென்ன? முகமூடிகளைக் கழட்ட முடியாதிருப்பதேன்? முயலாதிருப்பதேன்?

இவை அனைத்தும் எம்முள் திணிக்கப்பட்டது. சில சமயங்களில் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டது. நீதியை நிலைநாட்ட உரிமையைப் பெற உருவான போராட்டம் திசை மாற்றப்பட்டு எம்முள் திணிக்கப்பட்டது. மனித செயற்பாடுகளை இலகுவாக்க உருவான தொழினுட்ப வளர்ச்சியை அளவுக்கு அதிகமாக விரும்பி நாம் ஏற்றுக் கொண்டது. இது போல பல காரணங்கள் உள்ளன. முகாம்களில் அனைத்து மக்களுடனும் இணைந்து வாழ்ந்து அனைத்தையும் எமது தலைமுறையினரும் கற்றுக் கொண்டு விட்டனர். தொலைபேசி மூலம் தெரிந்து கொள்ளக் கூடாததையெல்லாம் தெரிந்து கொண்டு விட்டனர். தெரிந்து கொண்டது மட்டுமல்லாது பயன்படுத்திப் பார்க்கின்றனர். அல்லது முயற்சிக்கின்றனர்.

மேலும் இவ்விடயங்கள் தொடர்பாக விரிவாகத் தெரிந்து கொள்ளக் காத்திருப்போம். இவற்றையெல்லாம் மாற்ற வேண்டும் என்றால் நாம் என்ன செய்ய வேண்டும். எமது தலைமுறையினரை, எமது கிராமத்தை, எமது பங்கை காக்க எமது செயற்பாடுகள் எவ்வாறு இருக்கப் போகின்றது. காலத்தின் போக்கிற்கேற்ப எமது செயற்பாடுகளை திட்டமிட்டு செயல்படுத்துவோம்.

எடுத்துக்கொண்ட விடயத்திற்கு வருகின்றேன். இவ்விதத்தில் கன்னியா பங்கின் ஆரம்ப காலம் தொடர்பாக அறிந்து கொள்ள அங்கு சென்றேன். திருகோணமலை நகரத்திலிருந்து 8KM தொலைவில் வவுனியா நோக்கி பயணிக்கும் பிரதான பாதையின் இரு பக்கங்களிலும் சுமார் 137 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

அழகான வயல்வெளிகளும் மலைகளும் காடுகளும் இணைந்தவாறாக அமைந்த இடம் எமது நாட்டில் மட்டுமல்லாது உலக அளவில் அறியப்பட்ட ஓர் இடம் கன்னியா வெந்நீர் ஊற்றை பார்க்காதவர்கள் திருகோணமலைப் பிரதேசத்தில் யாரும் இருப்பார்கள் என நம்பவில்லை. வெந்நீர் ஊற்றுப் பகுதி தற்போது பெரும்பான்மை சமூகத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதாக அறிந்தேன். திட்டமிட்ட செயற்பாடுகள் மனவேதனையையும் வெறுப்பையும் தருவதோடு எதிர்காலத்தில் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தும். தற்போது அப்பகுதியில் மூன்று மதங்களின் வணக்கஸ்தலங்களையும் காணக்கூடியதாக உள்ளது.

வடகிழக்குப் பகுதியில் வாழ்கின்ற தமிழ் மக்களின் பொருளாதாரம் கல்வி கலாச்சாரம் வரலாற்றுப் பதிவுகள் என்பன தற்போது காணப்படுகின்ற நிலைக்கு முற்றிலும் காரணமான யுத்தம் கன்னியா கிராமத்தையும் முற்றிலும் ஆட்கொண்டுள்ளது. மிகமோசமான பதிவுகளை தன்னுள் ஏற்றுக் கொண்டு காணப்படுகின்றதை தற்போதும் காணக்கூடியதாக இருக்கின்றது. 30 ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெயர்ந்து சென்ற பலர் இன்னும் வரவில்லை. அவர்களின் வாழ்விடங்கள் பழைய நினைவுகளை வெளிக்காட்டிக் கொண்டிருப்பது அங்குள்ள மக்களுக்கு மனஉளைச்சலை கொடுப்பதோடு சமூக விரோத செயல்களுக்கு ஏதுவான இடங்களாக மாறிவருகின்றது. சமூகத்தில் பொறுப்பு மிக்கவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது எதிர்கால சந்ததியினருக்கு ஆரோக்கியமானது. மீண்டும் நாம் இணைந்து அனைத்தையும் உருவாக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

1944ஆம் ஆண்டு முதல் ஆலயத்தின் அருகாமையிலேயே வசித்து வருகின்ற தருமலிங்கம் மேரி மெட்டில்டா அவர்களைச் சந்திக்கச் சென்றேன். 'கன்னியா' எனும் பெயர் எப்படி வந்திருக்கும் எனக் கேட்டேன், 'அது வரலாற்றுப் பெயராக இருக்கலாம் நான் அறிந்த வகையில் இராவணன் வரலாற்றோடு தொடர்புபடுத்தி அப்பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. தனது தாயின் இறுதிக் கிரியைகளை நடாத்த இராவணன் வந்தபோது வெந்நீரூற்றுப் பகுதியில் ஏழு கன்னிகள் நீராடிக் கொண்டிருந்ததாகவும் இராவணனைக் கண்டு அவர்கள் ஒழிந்ததாலும் கோபமடைந்த இராவணன் 'கன்னியா?' எனக் கேட்டவாறு ஏழு இடங்களில் தனது வாளால் குத்தியதனால் கன்னியா எனும் பெயரும், ஏழு சுடுநீர் கிணறும் உருவானதாக வரலாற்றுக் கதைகள் கூறப்படுகின்றன.

அப்பகுதியில் உள்ள மலையில் 40 அடி நீளமான கல்லறை ஒன்று காணப்படுகின்றது. 60 அடி ஆழமான கிணறு ஒன்று காணப்பட்டது எனவும் சிறுவயதில் சென்று பார்த்ததாகவும் அபாயமான பகுதி என அடையாளப்படுத்தப்பட்டு இருந்ததாகவும் தற்போது அனைத்தும் மாற்றப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

கன்னியாப் பகுதியில் தற்போது பல இடங்களில் பல ஆலயங்கள் காணப்படுவதாகவும், அக்காலப் பகுதியில் எமது ஆலயம் மாத்திரம் காணப்பட்டதாகவும் ஓர் உன்னதமான சமூகமாக இருந்ததாகவும் அது தற்போது மாற்றமடைந்துள்ளதாகவும் கூறினார். இவ்வாறான பிற சபைகள் யாரால் எவ்வாறு உருவாக்கப்படுகின்றது என்பதை அறிய முடியவில்லை என்று கூறி சலித்துக் கொண்டார்.

தொடர்ச்சி 9ம் பக்கத்தில்..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை இயேசு

628இல் இளவரசி பொலிக்சேனா (1566-1642) பிராகா நகர் கார்மேல் துறவிகளுக்கு 19 அங்குல உயரமுடைய குழந்தை இயேசுவின் மெழுகு சொரூபத்தை வழங்கியதிலிருந்து இந்த வரலாறு தொடங்குகிறது. இந்தச் சொரூபம், புனித அவிலா தெரேசாவால் எசுப்பானிய அரச குடும்பத்திற்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அந்தக் குடும்பத்தின் விலையேறப்பெற்ற சொத்தாக மதிக்கப்பட்ட இந்தச் சொரூபம், இளவரசி பொலிக்சேனாவின் திருமணப்பரிசாக அவரது தாய் மரிய மான்ரிக்கால் 1603இல் வழங்கப்பட்டது.

குழந்தை இயேசு பக்தியால் பல்வேறு அற்புதங்களைப் பெற்றுக்கொண்ட இளவரசி பொலிக்சேனா, தன்னிடம் இருந்த குழந்தை இயேசு சொரூபத்துக்கு அரச உடைகளும், மணிமகுடமும் அணிவித்து அழகு பார்த்தார். அரசர் 2ம் பெர்டினான்ட், தனது தலைநகரை பிராகாவிலிருந்து வியன்னாவுக்கு மாற்றியபோது, பொலிக்சோனா இந்தக் குழந்தை இயேசு சொரூபத்தை கார்மேல் சபைத் துறவிகளிடம் ஒப்படைத்தார். அவர்கள் குழந்தை இயேசு பக்தியை மக்களிடையே பரப்பினர். போர் உள்ளிட்ட சில காரணங்களால், துறவிகள் வாழ்ந்த கார்மேல் மடம் சிறிது காலம் மூடப்பட்டது. அக்காலத்தில் இந்தச் சொரூபம் மறைவான இடத்திற்கு அப்புறப்படுத்தப்பட்டது.

1637ஆம் ஆண்டு, கரங்கள் சேதமடைந்த குழந்தை இயேசுவின் இந்தச் சொரூபத்தை அருட்தந்தை சிரிலஸ் மீண்டும் கண்டெடுத்தார். அவர் குழந்தை இயேசு முன்பாகச் செபித்துக் கொண்டிருந்த வேளையில், "எனக்குக் கரங்களைக் கொடு, நீ என்னை மகிமைப்படுத்தினால், நான் உனக்கு அமைதியும், உயர்வும் தருவேன்" என்ற குரலைக் கேட்டார். அதன்பிறகு குழந்தை இயேசுவின் கரங்கள் சரிசெய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்து, அந்நகரில் பரவிய கொள்ளைநோய் நீங்கியது. குழந்தை இயேசுவை நாடிச் சென்ற அனைவரும் அற்புதங்களைப் பெற்று மகிழ்ந்தனர். அதனால் குழந்தை இயேசுவின் பக்தி உலகமெங்கும் விரிந்து பரவியது.



பெரம்பூர் புனித தெரேசா ஆலயத்தில் உள்ள குழந்தை இயேசு



பிராகா நகர் குழந்தை இயேசுவின் சிலை

இயேசு கிறிஸ்துவின் குழந்தைப் பருவத்தைத் தியானிக்கும் பக்திமுயற்சியாக இது அமைந்துள்ளது. இயன்றளவும் பிராகா நகர் குழந்தை இயேசுவை தரிசிக்க ஆயிரக்கணக்கான மக்கள் திருப்பயணம் மேற்கொண்டு வருகின்றனர். பிராகா குழந்தை இயேசு ஆலய ஆண்டுத் திருவிழாவின் நிறைவில், குழந்தை இயேசுவின் திருப்பவனியும், குழந்தை இயேசுவுக்கு மகுடம் அணிவித்தலும் இக்காலம் வரை மரபாகத் தொடர்கின்றன.

முற்காலத்தில், அயர்லாந்து நாட்டுத் திருமண நிகழ்ச்சிகளின் போது கால-நிலை சீராக இருக்க வேண்டும் என்பதற்காக, மணமக்கள் தங்கள் திருமணத்திற்கு முந்திய நாள் இரவில் தங்கள் இல்லத்தின் முன்பாகப் பிராகா நகர் குழந்தை இயேசுவின் சொரூபத்தை வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை, பிரேகு நகர் குழந்தை இயேசுவின் இரண்டு மரச் சொரூபங்கள் செய்யப்பட்டு உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள கத்தோலிக்க ஆலயங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்தியாவில் பெங்களூர் குழந்தை இயேசு ஆலயத்திலும், பெரம்பூர் புனித தெரேசா ஆலயத்திலும் இந்தச் சொரூபங்கள் உள்ளன.

நன்றி - இணையம்

08ம் பக்கத் தொடர்ச்சி...... **பங்கின் வரலாறு......**

தொடர்ந்து 1948ம் ஆண்டு தொடக்கம் வசித்து வருகின்ற ரூபராஜன் திரேசா மரியம், திருமதி. P. ஜக்குலின் அவர்களைச் சந்தித்தேன். தான் அறிந்த வகையில் அருட்பணி. டானியேல் தான் முதலாவது பங்குத்தந்தையாக இருக்க வேண்டும். எமக்கு வெல்வேரி யாகப்பர் ஆலயம் தான் பங்கு ஆலயம். நாங்கள் அங்கு தான் பாடகர் குழுவுடன் நடந்து செல்வோம். அங்கு திருப்பலிக்காக சென்று வருவது ஆபத்து என்பதாலும் அதிக தூரம் என்பதாலும் 1976ம் ஆண்டு காலப்பகுதியில் திரு. பிலிப் அரசு என்பவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட காணியில் அருட்பணி அரசரெட்ணம் அவர்களினால் குடிசை ஆலயம் ஒன்று அனைவராலும் இணைந்து அமைக்கப்பட்டது.

தொடர்ந்து அருட்பணி. பொன்கலன், அருட்பணி. இருதயம் ஆகிய இருவரும் வருகை தந்தனர். அருட்பணி. இருதயம் பாலையூற்று பங்குத்தந்தையாக இருந்தார். எமது பங்குத்தந்தையாக அருட்பணி. பொன்கலம் இருந்தார். தினமும் எமது பங்கில், வெல்வேரி ஆலயத்தில், பன்குளம் ஆலயத்தில் என மூன்று திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். அக்காலப் பகுதியில் கன்னியாவில் 15 கத்தோலிக்கக் குடும்பங்கள் காணப்பட்டது.

சிறிய ஆலயமாக இருந்தாலும் சந்தோசமாகவும், ஒற்றுமையாகவும் அனைவரும் இருந்தோம். "பெற்றோல் மெக்ஸ்" விளக்கு ஆலயத்தில் மாத்திரம் பாவிக்கப்பட்டது. என்ன குறைபாடு இருந்தாலும் அனைவரும் காலை தொடக்கம் மாலை வரை ஆலயத்திலேயே இருப்போம். தற்போது என்ன நடந்தது என்று தெரியவில்லை. அது குறைவாகவே காணப்படுவதாக தெரிவதாகவும் கூறினார். தற்போதைய பங்குத்தந்தை அனைவரையும் இணைப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொள்கின்றார்.



1985ம் ஆண்டு முற்றிலுமாக இடம்பெயர்ந்து அலஸ்தோட்ட முகாமில் தஞ்சமடைந்த மக்கள் 2002ம் ஆண்டளவில் கொஞ்சம் கொஞ்சமாக மீளக் குடியேறினார்கள். 1990ம் ஆண்டு இந்தியன் Army இருந்த போது வீதியோரப் பகுதியில் ஒரு சில குடும்பங்கள் இருந்தார்கள்.


20வருடங்களுக்கு மேலான முகாம் வாழ்க்கையானது எம்முடைய சமய சமூக கலாச்சார விழுமியங்களை இல்லாதொழித்து விட்டது. பொதுவான இடங்களிலும், வீடுகளிலும் வளர்கின்ற பிள்ளைகளுக்கிடையில் நிறைய வேறுபாடுகள் காணப்படும். அக்காலப் பகுதியில் இருந்த மக்கள் தற்போது இல்லை. ஒருசில குடும்பங்கள் தான் தற்போது உள்ளது. ஏனையவர்கள் வருவதாக இல்லை. இங்கு தற்போது வசிக்கும் மக்களின் பிரதானமான தொழில்களாக கூலி, வயல், ஆடு மாடு வளர்ப்பு, சுய தொழில், விறகு வெட்டுதல், மேசன், ஒரு சிலர் மாத்திரம் அரச தொழில் புரிகின்றார்கள்.

அருட்தந்தை றேமன்ட் அரசரட்ணம் அவர்களினால் அமைக்கப்பட்ட ஆலயமானது 1985 யுத்த காலத்தில் முற்றாக அழிக்கப்பட்டது. 2004ம் ஆண்டு பங்கைப் பொறுப்பேற்ற அருட்தந்தை அன்ரனி லியோ அளப்பரிய பணிகளைச் செய்தார்.

யுத்தத்தினால் அழிவடைந்த ஆலயம் மீண்டும் இவரது முயற்சியால் கட்டப்பட்டது. இவரது முழுமையான உழைப்பு இந்த ஆலயம் என்றால் அது மிகையாகாது. சிலுவைப்பாதை ஸ்தலங்கள் அமைக்கப்பட்டதுடன் வளர்ந்தோருக்கான, மறையாசிரியர்களுக்கான விவிலிய வகுப்புக்கள், திருப்பாலத்துவ சபை செயற்பாடுகள், சிறப்பான நத்தார் புதுவருட ஒளிவிழாக் கொண்டாட்டங்கள் அத்துடன் வாழ்வாதார, சுயதொழில் செய்வோருக்கான உதவிகள் என அனைத்து வழிகளிலும் மிக நிறைவான பணியினை இவர் மேற்கொண்டார். இவரது பணியினை கிறிஸ்து அரசர் ஆலயம் மட்டுமல்ல கன்னியா பிரதேசம் முழுவதுமே சொல்லிக் கொண்டிருக்கும். என்றும் நினைவை விட்டு அகலாத ஓர் அருட்தந்தை லியோ என்றால் அது மிகையாகாது. 2013ம் ஆண்டு பங்கிற்கு வருகை தந்த அருட்பணி N. C அருள்வரதன் அவர்கள் மக்களுடன் இணைந்து குறிப்பிடத்தக்க பல பணிகளை நிறைவேற்றினார். 2017ம் ஆண்டு இவரது 25வது வருட குருத்துவ வெள்ளி விழா கொண்டாட்டங்கள் இவ் ஆலயத்தில் இடம்பெற்றது இம்மக்களுக்கு பெருமையாகும்.

அருட்பணி. T. கிங்ஸ்லி றொபட் அவர்கள் சிலகாலம் எமது பங்கில் பணியாற்றினார். இவரது தலைமையில் பங்குமனை புதுக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டதுடன் ஆலயத்தின் சில திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டது. இக்காலப் பகுதிகளில் சில பங்குத்தந்தையர்கள் எமது ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றியிருக்கிறார்கள்.

கன்னியா கிறிஸ்து அரசர் ஆலய பங்குத்தந்தை அருட்பணி. சுதர்ஷன் அவர்களைச் சந்தித்து கதைத்தேன். தற்போது 40இற்கும் மேற்பட்ட கத்தோலிக்க குடும்பங்கள் வசித்து வருகின்றார்கள். நவம்பர் மாதத்தின் இறுதி ஞாயிறன்று ஆலய திருவிழா கொண்டாடப்படுவதுடன் மறைக்கல்வி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறுவதாகவும் திருப்பாலத்துவ சபை, பீடப்பணியாளர்கள் சபை என்பன இயங்குகின்றது எனவும் ஏனைய பக்திச் சபைகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறினார்.




இப்பங்கில் அநேக வேலைகள் நிறைவேற்ற வேண்டியுள்ளதுடன் தற்போதைய பங்குத்தந்தை அநேக முயற்சிகளை மேற்கொள்வதாக அறிய முடிந்தது. அனைத்து மக்களும் இணைந்து ஒற்றுமையாக அர்ப்பணிப்புடன் பங்கை மீளவும் கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டும் எனவும் இவ் ஆக்கத்தினை உருவாக்க உதவிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆக்கம் : திரு நா. சுரேஸ்,**
**திரிகூடம்,**
**மூதூர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித மாற்கு நற்செய்தி சிறப்புப் போட்டி - 03 முடிவுகள்



பங்குபற்றியவர்கள் : 41 பேர்
மிகச் சரியாக விடையளித்தோர் : 33 பேர்

### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/-
கவின் கிறிஸ் யஸ்வின்
இல 55/1, அந்தோனியார் வீதி,
செல்வநாயகபுரம்

2ம் பரிசு 300/- ரூபா
எட்மன் கேமியன் கிளிட்டஸ்
3ம் வட்டாரம்
நிலாவெளி

3ம் பரிசு 200/- ரூபா
எம். றோஸ்மலர்
மாங்காயூற்று
கன்னியா

### பாராட்டுக்குரியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 01.பி. டொலிடா | - பாலையூற்று | 16.திருமதி. ஜோ. அனஸ்ரி | - அன்புவழிபுரம் |
| 02.திருமதி. அ. ஹெலனா | - பாலையூற்று | 17.நேமிநாதன் சரணியா | - கும்புறுப்பிட்டி |
| 03.புஸ்பா சேவியர் | - உவர்மலை | 18.போ. பி. பிரவின் ஜோர்டன் | - உவர்மலை |
| 04.ச. கன்சிக்கா | - நிலாவெளி | 19.இ. ஜெசூரன் | - பேராலயம் |
| 05.தே. சுமில்டன் | - நிலாவெளி | 20.றொ.எமில்ராஜ் | - செல்வநாயகபுரம் |
| 06.எஸ். டிலூசிஹா | - கன்னியா | 21.சு. சுவேக்கா | - பாலையூற்று |
| 07.றிச்சட் ஷாதேஸ் | - குவாடலூப்பே | 22.திரேசா சேவியர் | - பேராலயம் |
| 08.எப். ஆர். எப். ரோஹித் | - குவாடலூப்பே | 23.நே. கெஷ்மியா | - கும்புறுப்பிட்டி |
| 09.லோ. போ. ஆன்ஜெரின் | - பாலையூற்று | 24.நி. ஏஞ்ஜெல் | - பாலையூற்று |
| 10.எஸ். தனூசிஷா | - கன்னியா | 25.சு. கௌசல்யா | - பாலையூற்று |
| 11.காமலிற்றா விமலதாஸ் | - பேராலயம் | 26.றிச்சட் சர்மிளா | - குவாடலூப்பே |
| 12.ஜி. கெய்சர் கெவின் | - குவாடலூப்பே | 27.வெ. ஆன்டிலக்ஷிக்கா | - கும்புறுப்பிட்டி |
| 13.தயாகரன் ஆகாஸ் | - குவாடலூப்பே | 28.றொ. டிலுக்ஸ்ராஜ் | - செல்வநாயகபுரம் |
| 14.எஸ். நிவேதிஹா | - கன்னியா | 29.நோ. மேரிறஜனட் | - பேராலயம் |
| 15.கே. கிறிஸ் ஜெஸ்வின் | - செல்வநாயகபுரம் | 30.கரல்ட் பிரணவன் கிருபாகரன் | - பேராலயம் |

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

### இயேசு சிறுவர்களை அழைத்தல்

பங்கு பற்றியவர்கள் : 41சிறுவர்கள்

#### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500 /- ரூபா
யூலியஸ் ஜூவிஸ் றெஜினோல்ட்
4ம் ஒழுங்கை, பெரியகுளம்,
சாம்பல்தீவு

2ம் பரிசு 300 /- ரூபா
கோகுல் அபிஷா
5ம் வட்டாரம்,
கும்புறுப்பிட்டி

3ம் பரிசு 200 /- ரூபா
ம. க.ஃபினா
இல:70?35, யாட் அப்ரோச் வீதி,
திருகோணமலை



### புனித மாற்குவின் சின்னம்

பங்கு பற்றியவர்கள் : 16 சிறுவர்கள்

#### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500 /- ரூபா
என். சரணியா
5ம் வட்டாரம்,
கும்புறுப்பிட்டி

2ம் பரிசு 300 /- ரூபா
ஜொனத்தன் பேடினன்
இல : 30, சுங்க வீதி,
திருகோணமலை

3ம் பரிசு 200 /- ரூபா
கி. செரின்ரன்
இல : 53/3, 5ம் ஒழுங்கை,
இலிங்கநகர்

பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றியும்

## புதியவைகள் மலரவே.........

அருட்பணி. N.C. அருள்வரதன்

**கவிதை வரிகளை**
**சரியாக வடிவமையுங்கள்**
**இதோ கவிதை வரிகள் ..........**

- புத்தாண்டே வருக எங்கும்
- புதுப்பொலிவைத் தருகவே
- முடிந்த ஆண்டோடு
- முடியட்டும் அனைத்துத் துயர்களும்
- மலர்ந்துள்ள புதிய ஆண்டு
- விளைவிக்க வேண்டும் புதியவற்றை
- அன்புறவு மனஅமைதி நியாய வாழ்வுகள்
- நிலைபெறவே புதிய ஆண்டு உதவ வேண்டும்
- முடிந்தவைகள் முடியட்டும்
- இனியும் அவைகளைப் பேசாமல்
- நம்பிக்கை கொண்ட மனங்களோடே
- நாம் கேட்போம் ஒன்றாகி இறைவனையே
- நல்லவைகள் நாட்டிலே விளைய

மூன்று வரிகள் மட்டும் இடம் மாறியுள்ளன.
சரியாகக் கண்டு வடிவமையுங்கள்
குலுக்கல் மூலம் தெரிவு இடம்பெறும்

1ம் இடம் 500/-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-

முடிவுத்திகதி 15.03.2019

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி

### கோவிலில் சிறுவன் இயேசு

- பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=



பெயர் ..............................
முகவரி ..............................
பங்கு ..............................
தரம் ..............................
முடிவுத் திகதி 05.03.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீமைகள் மறைய வேண்டும் கவிதைப் போட்டி முடிவுகள்

பங்குபற்றியவர்கள் : 41 பேர்
சரியாக வடிவமைத்தவர்கள் : 26 பேர்



### பரிசுக்குரியவர்கள்


**1ம் பரிசு 500/- ரூபா**
பி. பிறிவின்
குவாடலூாப்பே ஆலயம்,
நித்தியபுரி

**2ம் பரிசு 300/- ரூபா**
திரேசா சேவியர்
27/3, வித்தியாலயம் வீதி,

**3ம் பரிசு 200/- ரூபா**
யே. டிவேஞ்சன்
676, அன்புவழிபுரம்,
திருகோணமலை

### பாராட்டுக்குரியவர்கள்

01. ஜே. அனுஜன் - அலஸ்தோட்டம்
02. ஆ. ஜெஸ்மின் - யாழ்ப்பாணம்
03. சா. சலோமி - உவர்மலை
04. லெஸ்லி ஜோசப் - அலஸ்தோட்டம்
05. பிலிப்பெலிசியன் சேவியர் - பாலையூற்று
06. T. ரோன்சன் - திருகோணமலை
07. டெலிஷா நெவில்ராஜ் - திருகோணமலை
08. S. ஆரோன் - மட்டிக்களி
09. E. எமில்ரன் - திருகோணமலை
10. அ. சாருணியா - யாழ்ப்பாணம்
11. ஷரோன் ராகல் - பாலையூற்று
12. J. காமல் கலாவதி - கன்னியா
13. அ. ஹெலனா - பாலையூற்று
14. ச. கலிஸ்ரா - கல்முனை
15. சு. பகீரதன் - அன்புவழிபுரம்
16. சு. கௌசல்யா - பாலையூற்று
17. ஜோசப் ஜேசுதான் - திருகோணமலை
18. தே. சமில்டன் - நிலாவெளி
19. ம. க.ஃபினா - திருகோணமலை
20. J. பிரபா - உப்புவெளி
21. சு. பிறிச்சட் - அன்புவழிபுரம்
22. R. டயானா ரூபன் - அன்புவழிபுரம்
23. மு. புவிதாசன் - பள்ளத்தோட்டம்



# விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 31
## எபேசியர் அதி 1 - 6 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞா | | | | | | | | | |
| ■ | ■ | போ | | | | | | | ■ |
| ம | | | | | | ஊ | ■ | ■ | தூ |
| | ந | | | | | ■ | ■ | | |
| | ■ | இ | | | | ■ | வா | | |
| | மு | | | | | | | | |
| | | | | | | தி | | | |
| | ■ | போ | | | ■ | ■ | | | |
| | உ | | | | | | | | ■ |
| ■ | து | | | | | ■ | | தி | ■ |

01. மண்........ஹள்........வை
02. ஊழிகால.......க
03. தூய்........ரிலும்
04. திருச்........பை மீது
05. போ......வா........கவும்
06. உரி........ப்பேறு
07. திருமு.......க்கு
08. போற்.........
09. முழுமுய........சி
10. நறும........ம்
11. ஞானத்........டு வாழு......கள்
12.வான்வெ......யில்
13. துணிவு.......ன்
14. இசை.........டி

பெயர் :
முகவரி :
பங்கு :

முடிவுத்திகதி : 15. 03. 2019

# இவ்வாண்டிற்கான சிறப்புப் போட்டி
# புனித லூக்கா நற்செய்தி
# அதி 01-03 வரை
# வினாக்களுக்கு விடை அளியுங்கள்

- ❖ எவரும் பங்கு பற்றலாம்.
- ❖ போட்டோப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- ❖ போட்டியாளர்கள் சரியாக விடையளித்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்

1ம் பரிசு 500/- 2ம் பரிசு 300/- 3ம் பரிசு 200/-

01. தாவீதின் வழிமரபினரான யோசேப்பு தனக்கு மண ஒப்பந்தமாயிருந்த மரியாவோடு பெயரைப் பதிவு செய்ய எங்கிருந்து எங்கு சென்றார்கள்?

02. ஆண்டவரின் திருக்கோவிலுக்குள் சென்று தூபம் காட்டுவது யார் என அறியச் சீட்டுப் போட்ட போது யாருடைய பெயர் சீட்டில் விழுந்தது?

03. "இதோ இக்குழந்தை இஸ்ராயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும். இவ்வாறு பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும், உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" என யார் யாரைப் பார்த்துக் கூறியது?

04. மரியா எலிசபெத்தை வாழ்த்திய போது நடைபெற்ற சம்பவம் யாது?

05. திருமுழுக்கு யோவானைப் பற்றி எந்தப் பழைய ஏற்பாட்டு நூலில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?

06. எருசலேம் கோவிலில் சிறுவன் இயேசு என்ன செய்து கொண்டிருந்தார்?

07. கருவுற்றிருந்த எலிசபெத் எவ்வாறு ஆண்டவரைப் புகழ்ந்தார்?

08. இயேசு யோவானிடம் திருமுழுக்குப் பெற்ற பின் நிகழ்ந்தது என்ன?

09. எருசலேம் ஆலயத்தில் சிமியோனைப் போல் இருந்த பெண் யார்? அவர் எக்குலத்தைச் சார்ந்தவர்? அவர் அங்கு என்ன செய்து கொண்டிருந்தார்?

10. வானதூதர் மரியாவுக்குத் தோன்றிக் கூறிய வாழ்த்து என்ன?

11. ஏரோதின்' தீச்செயலைக் கண்டித்த யோவானை ஏரோது என்ன செய்தான்?

12. கோவிலில் இருந்து மக்கள் முன் வெளியே வந்த செக்கரியா எந்நிலையில் காணப்பட்டார்?

13. லூக்கா நற்செய்தியில் "மரியாவின் பாடல்" எந்த அதிகாரம்? வசனங்கள் எத்தனை?

14. எழுதுபலகையில் "யோவான்" என எழுதிய பின் செக்கரியாவுக்கு என்ன நிகழ்ந்தது?

15. "மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ பார் உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக் கொண்டிருந்தோமே" என்று சிறுவன் இயேசுவைப் பார்த்து பெற்றோர்கள் கேட்டபோது அவர் அளித்த பதில் யாது?

பெயர் :
முகவரி :
பங்கு :

முடிவுத்திகதி 15.03.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
1984
11
16



உதிர்வு
2014
01
15

## Dr. ஜெ. றொபின்சன்

"ஏனெனில் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே,
நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே" (பிலி 1:21)

அன்பின் பரலோக பிதாவே .....
இயேசு இரட்சகரே.....
பரிசுத்த ஆவியானவரே.....
நீர் எம் குடும்பத்திற்கு தந்த றொபின்சனுக்காக
உமக்கு கோடி நன்றி ஐயா.... இவர் வழியாக நீர்
அனைவருக்கும் செய்த சகல நன்மைகளுக்காகவும்
கோடி நன்றி ஐயா.....
இவர் இந்த உலகத்திலே வாழ்ந்த போது அறிந்தும் அறியாமலும்
செய்த எல்லாப் பாவங்களையும் சிலுவையின் இரத்தத்தால் கழுவி
இயேசுவே உமது பரலோக இராச்சியத்தில் இவருக்கும்
உரிமை அளித்து வானதூதர்களைப் போல இவரும் இடைவிடாது
புகழ்ந்து உம் பிரசன்னத்தில் இளைப்பாற வேண்டுமென்று
இயேசுவின் இனிய நாமத்தில் மன்றாடி ஜெபிக்கின்றோம்
எங்கள் நல்ல பிதாவே!
ஆமென்!

குடும்பத்தினர்

# உரையாடலை மேற்கொள்ளாவிடில் பெரும் ஆபத்து




அபுதாபியில் நான் ஒரு நவீன நாட்டையும், மிகச் சுத்தமான நகரையும் கண்டேன். அதேவேளையில் இந்நாடு பலரையும் வரவேற்கும் மனப்பாங்கு கொண்டிருந்தது. என்னைக் கவர்ந்தது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து திரும்பி வரும் வழியில், விமானப் பயணத்தில் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஏறத்தாழ 30 நிமிடங்கள் நீடித்த இச்சந்திப்பில், கிறிஸ்தவ இஸ்லாமிய உரையாடல், திரு அவையில் அருள்சகோதரிகள் பாலியல் வழியில் துன்புறுத்தப்படுதல், வெனிசுவேலா அரசுத் தலைவர் திருத்தந்தைக்கு எழுதிய மடல் ஆகியவைகள் முக்கிய சில கேள்விகளாக எழுப்பப்பட்டன.

அதற்கு பதிலளித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அத்தகைய குறைபாட்டை எதிர்கொள்ளத் தான் தயாராக இருப்பதாகவும் அதற்கு மாறாக, இஸ்லாமியரோடு உரையாடலை மேற்கொள்ளாமல் போவது அதைவிட பெரும் ஆபத்து எனவும் எடுத்துரைத்தார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

# திருஅவையின் நம்பகத் தன்மையை வளர்க்கும் கூட்டம்




திரு அவையில் சிறியோரின் பாதுகாப்பு என்ற மையக்கருத்துக்களுடனும் பெப்ரவரி 21ம் திகதி முதல் 24ம் திகதி வரை வத்திக்கானில் நடைபெறவிருக்கும் ஆயர்களின் முக்கிய கூட்டம், திருஅவை மீது மக்களின் நம்பகத்தன்மையை வளர்க்கும் என்று தான் நம்புவதாக, இக்கூட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவர் கூறினார்.

நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தினை ஏற்பாடு செய்யும் குழுவில் ஒருவரான. இயேசு சபை அருள்பணியாளர் Hans Zollner அவர்கள், வத்திக்கான் செய்திக்கு அளித்த பேட்டியில், இக்கூட்டத்திற்கு தேவையான அனைத்து தயாரிப்புக்களும் சீராக, தீவிரமாக நடைபெற்று வருவதாகக் கூறினார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

# திருத்தந்தையின் மரியன்னை பக்தி, வறியோர் மீது கவனம்




இலத்தீன் அமெரிக்க கண்டத்திலிருந்து வந்திருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அக்கண்டத்திற்கு உரிய, மரியன்னை பக்தி, வறியோர் மீது கவனம், மக்களிடையே திகழும் இறையியல் என்ற சிறப்பு அம்சங்களை தன்வயப்படுத்தியுள்ளார் என்று திருப்பீட உயர்அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஆயர்கள் பேராயத்தின் தலைவர், கர்தினால் Marc Oullet அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தலைமைப் பணியைக் குறித்து, வத்திக்கான் நாளிதழ் Osservatre Romano வுக்கு அளித்த பேட்டியொன்றில் இவ்வாறு கூறியுள்ளார்.

இலத்தீன் அமெரிக்க திருப்பீட அவையின் தலைவராகவும் பணியாற்றி வரும் கர்தினால் Oullet அவர்கள், கடந்த ஆண்டு, "பெண்களும் இலத்தீன் அமெரிக்க சமுதாயமும்" என்பது, இத்திருப்பீட அவையின் ஆண்டு கருத்தாக தெரிவு செய்யப்படுவதற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் முக்கிய காரணம் என்று எடுத்துரைத்தார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

# பன்னாட்டு கருத்தரங்கில் பேராயர் அவுஸ்



கடவுள் மீது நம்பிக்கை கொண்ட அனைவரும், மனிதரின் உடன் பிறந்த நிலை மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், அல் அசார் இஸ்லாமிய தலைமைக்குருவும் கூறியுள்ளனர் என்பதை திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் பன்னாட்டு கருத்தரங்கில் எடுத்துரைத்தார்.

பல்சமய உரையாடல் உலக சமாதானத்திற்கும், உண்மையான மனித முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைகிறது என்று திருத்தந்தை பிரான்சிஸ் ஐக்கிய அரபு அமீரகத்தில் கூறிய சொற்களை தனது உரையில் சுட்டிக் காட்டினார்.

ஆதாரம் - வத்திக்கான் வானொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org